Registered as a Newspaper in Ceylon

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை
உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

வாரமலர்

விலை சதம் 20

மில்க் வைற்
நீல சோப், பார் சோப்
பட்டு, பருத்தி, நைலோன்
துணி வகைகளையும்
ஆச்சரியப்படத்தக்க முறையில்
சுத்தம் செய்கிறது

மலர் 9 | பிலவங்க சித்திரை 18 | முஹர்றம் 20 | (1—5—67) | திங்கட்கிழமை | இதழ் 79

# நாட்டின் பல பாகங்களிலும் இன்று மேதின ஊர்வலங்கள், கூட்டங்கள்



காட்டை அழித்துக் கழனிகளாக்கி, நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் தோட்டத் தொழிலாளர் பரம்பரையில் வந்த ஒரு பெண். தொழிலாளரின் ஐக்கியத்தினால் அவர்களின் உரிமையைப் பெற்றுக்கொடுத்த தினம் தான் இன்று உலகத் தொழிலாளர் கொண்டாடும் மேதினம். இந்தப் பெண் தோட்டத் தொழிலாளிதான், ஆனால் தோட்டத் தொழிலாளரே தொழிற்சங்கத்தினால் வேற்றுமைப்பட்டுநிற்கின்றனர் எந்தச்சங்கத்தின் மேதின ஊர்வலத்தில் கலந்துகொள்வது? எந்தக் கூட்டத்துக்குப் போவது? இப்படியொரு பிரச்னை இந்தப் பெண்ணுக்கு மட்டுமல்ல, இவரைப் போன்ற பல தொழிலாளருக்கும் இதே பிரச்னை தான். இது மட்டுமல்ல, ''உழைத்தது போதும் ஊருக்குப் போங்க'' என்று சொல்லிவிட்டால் நாளை ''எங்கே போவது?'' என்பதும் இந்தத் தொழிலாளருக்கு ஒரு பிரச்னை. எனினும் மேதினம் என்றாலே அவர்களுக்கு ஒரு 'குஷி' தான்.

## காட்சியில் கந்தரோடை அனுமாரும், விநாயகரும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நூதனசாலையில் கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் சிலையும், அனுமார் சிலையும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றது.

இவ்விருசிலைகளுடன் நாணயங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. கந்தரோடைப் பொருட்களை காட்சிக்கு வைப்பதற்காக ஒதுக்கப்பட்ட கண்ணாடிப் பெட்டிகள் சில காலியாகக் காட்சியளிக்கின்றன.

இக்கண்ணாடிப் பெட்டிகளுக்குள் முன்பு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த உயிரியல் பொருட்கள் ஒதுக்குப்புறமான இடத்தில் மறைவாக வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

உயிரியல் பொருட்களை யாழ்ப்பாணத்தில் உள்ளஒரு கல்லூரிக்கு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

## காலிமுக கூட்டத்தில் எஸ்.ஜே.வியும் பேசுவார்
### பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

இன்று மேதினம். தொழிலாளர் ஐக்கிய தினமான இன்று யாழ்ப்பாணத்தில் நான்கு இடங்களில் வெவ்வேறு தொழிற் சங்கங்களைச் சேர்ந்த நான்கு மேதினக் கூட்டங்களும் ஊர்வலங்களும நடைபெறுகின்றன.

கொழும்பிலும் மற்றும் நாட்டின் பல பாகங்களிலும் பல்வேறு அரசியல் கட்சிகளும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழுள்ள தொழிற்சங்கங்களின் ஆதரவுடன்இன்று ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்துகின்றன.

கொழும்பில் காலிமுக மைதானத்தில் தேசீய அரசாங்கத்தின் ஆதரவிலுள்ள தொழிற் சங்கங்களின் மே தினக்கூட்டம் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்திற்கு 'கொட்டாபாக்கி' லிருந்து தொழிலாளர் ஊர்வலம் வந்துசேரும். இ[illegible] ஊர்வலத்தில் இலங்கைத்தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த ஐயாயிரம் தோட்டத் தொழிலாளர் கலந்துகொள் [illegible] இந்த [illegible]

சுலோகங்கள் கோஷிக்கப்படமாட்டா. இதற்குப்பதிலாக ஒலிப்பதிவுகள் செய்யப்பட்ட பாடல்கள் ஒலிபரப்பப்படும். காலி முக மைதானத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி, செல்வநாயகம் உரை நிகழ்த்தவிருக்கிறார். திரு. செல்வநாயகம் கொழும்பில் நடைபெறும்மேதினக்கூட்டத்தில் உரை நிகழ்த்துவது இது தான் முதல்தடவை.

மேதின ஊர்வலங்கள், கூட்டங்கள் சம்பந்தமாக பொலிசார் தகுந்த [illegible]

## ரூ 1,1000 உதவி

சென்னை, ஏப்.30

பிரதமமந்திரியின் பீகார் வரட்சிநிதிக்கு தென்னிந்திய திரைப்பட வர்த்தகக் கழகம் ஒருலட்சத்து ஓராயிரம்ரூபாய் அளித்திருக்கிறது. தமிழ்நாடுமுதல்அமைச்சர் சி. என். அண்ணுதுரையிடம் ஒரு வெள்ளிப் பேழையில் வைத்து இத் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது. இப் பேழையை அமைச்சர் கருணநிதி ஏலத்துக்குவிட்டுஅதன் மூலம் கிடைத்த தொகையும் அந்நிதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

## "அரசியல்வாதிகளால் சைவத்துக்கு இடையூறு"
### திருப்பெருகு மகாநாட்டில் தீவுப்பகுதி எம். பி.

புங்குடுதீவு, ஞாயிறு

''அண்மைக் காலந் தொட்டு சைவத்துக்கு இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசியல்வாதிகள் [illegible]

[illegible] ணம். அரசியல்வாதிகளின் இவ்வித செயலால் இன்று வடபகுதியில் ஐந்துபௌத்த பாடசாலைகள் தோன்றியுள்ளன.''

புங்குடுதீவு சைவகலாசங்கத்தின் 42-வது ஆண்டு விழாவான திருப்பெருகு சைவ மகாநாட்டில் இ[illegible] புரை[illegible] தீவுப்பகுதி எம். [illegible] மேற்கண்டவாறு கூறி[illegible]

[illegible] சக்திகளாலும் அழிக்கவிட முடியாது. சைவம் தொன்மைவாய்ந்தது. பல

இன்னல்களை வென்றது. இறைவனைத் தரிசிக்க சைவ சமயத்தில் எல்லா மக்களுக்கும் உரிமையுண்டு. தீவுப்பகுதியில் சரித்திரப் புகழ் வாய்ந்த புங்குடுதீவு கண்[illegible]ம்மன் கோவிலையும் [illegible] நாகபூஷணி அம்மன் [illegible]

மூலம் [illegible] சைவத்துக்கு மதிப்பளி[illegible] தமை பாராட்டுக்குரியது.

## 'அடியார்கள் குறைகேட்க இறைவன் கோயிலிலிருக்கிறன்
### அவனைத்தரிசிக்க அனைவருக்கும் உரிமையுண்டு'

புங்குடுதீவு, திங்கள்

''தேவலோகத்திலே பிரம்மாவும் விஷ்ணுவும் மற்றும் தேவர்களும் பூமியில் மனிதனாகப்பிறக்கவேண்டுமென்று விரதமிருக்கிறார்களாம். ஏனென்றால் பூமியிலேயே இறைவன் அருள்பாலித்[illegible]

[illegible] கோவி[illegible] இறைவன குடியிருக்கிறன் என்றுநினைப்

தினம் புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசுவாமிகோவில் கீழைவீதியில்அமைந்த அலங்கரிக்கப்பட்ட பிரமாண்டமான பந்தலில், திருஞான சம்பந்தர் அரங்கில் நிகழ்ந்த சைவமகாநாட்டில் பிற்பகல் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப்பேசிய திரு. மு. [illegible] அவர்

[illegible] சகல சமய[illegible] உள்ளடக்கியது. மற்றெல்

சைவனுகவே காண்பான் யாவும்-யாவரும் சிவன் படைப்பாகவே சைவன் காண்கிறன்.

இந்நாளில் விஞ்ஞானிகள் சந்திர மண்டலத்தைப்பற்றி [illegible] வெள்ளை[illegible] கூறுகிறார்கள். அ[illegible]வர்கள் இருந்த[illegible]யே சந்திரம[illegible]

[illegible] த்தும் அவர்கள் கண்டதி[illegible]

## 'சகலருக்கும் சந்த[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணம். அரசியல்வாதிகளின் இவ்வித செயலால் இன்று வடபகுதியில் ஐந்துபௌத்த பாடசாலைகள் தோன்றியுள்

... சமய... சக்திகளாலும் அ... விட முடி... து. சைவம் தொன்மைவாய்ந்தது. பல

மூலம் ... மகா சைவத்துக்கு மதிப்பளி தமை பாராட்டுக்குரியது மற்றக் கோவில்களும் இம் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்'' என்று திரு. நவரத்தினம் மேலும் கூறினார்.


அகில இலங்கை ஐக்கிய தொழிற்சங்க சம்மேளன
இலங்கை அரசாங்க சேவையாளர் சம்மேளன

# மேதின விழா

## பகிரங்கக் கூட்டம்

காலம்: 1-5-67, திங்கள் பி. ப. 4-30 மணி
இடம்: யாழ். மத்திய கல்லூரி மைதானம்
தலைவர்: திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியு.சி., பா. உ.
சொற்பொழிவுகள், நடனம், நாடகம், மேளக் கச்சேரிகள் என்பன இடம்பெறும்
அனைவரும் திரண்டு வருக 176


## இன்று சந்திப்பு

கொழும்பு, ஞாயிறு நாளை திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் 'மாவட்ட சபைகள்' மசோதா பற்றிச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

# 'சகலருக்கும் சமநீதி கிடைக்க வேண்டும்'

## பிரதமரின் மேதினச் செய்தி

கொழும்பு, ஞாயிறு தொழிலாளரின் உரிமைகளை தேசிய அரசாங்கம் தொடர்ந்து பாதுகாத்து வரும். இதுவே அரசாங்கத்தின் கொள்கையுமாகும். தொழிலாளரின் வேலைநிலைமையையும் முன்னேற்றமடையச்செய்வதே அரசாங்கத்தின் கொள்கை. ஆனுல் உரிமையும் சலுகையும் சமூகத்தில் ஒரு பகுதியினருக்கு மட்டும் உரியதல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்'' என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா மேதினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சமூக பொருளாதார நீதி சகலமக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்றும் அப்போதுதான் சமூகம் முன்னேற்றமடையுமென்றும் பிரதமர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொழில் மந்திரி ஜனுப் எம். எச். முகம்மது விடுத்த செய்தியில் தொழிலாளர் தங்களினதும் தங்கள் தொழிற்சங்கங்களினதும்சக்தியை ஆக்க வழியில் உபயோகிக்கவேண்டுமென்று கேட்டுள்ளார்.

கோவில... இறைவன் குடியிருக்கிறுன் என்றுநினைப்பது அறிவீனம். இறைவன் எளியவன். பூமியிலுள்ள யாவரும் எளிதில் தன்னைத் தரிசித்து வேண்டுவனவேண்டவே இறைவன் அப்படி எங்கும் கோவில்கொண்டான். இறைவனுக்கு யாவரும் சமம். சமத்துவமே சைவம். அடியார் குறைகேட்க கோவில்களினுள்ளே குடிகொண்டிருக்கும் இறைவனைத்தரிசிக்க எல்லோருக்கும் உரிமையுண்டு. ஆலயக் கதவுகள் யாவருக்கும் திறந்துவிடப்படவேண்டும். புங்குடுதீவு மக்கள் கண்ணகை அம்மன் கோவிலைச் சகலருக்கும் திறந்துவிட்டமை அவர்களின் சைவப்பற்றையே காட்டும்.'' என நேற்று முன்

... சகல சமய... உள்ளடக்கியுது. மற்றெல்லாச்சம... அதன் தோற்றத்தை... கூறிவிடலாம். சைவம் அ...படியல்ல. அது அனுதியானது. அதற்கு காலம் இல்லை. சைவர்கள் காலங்கடந்த பரம்பரையினர். இப்பிரபஞ்சம் தோன்றியகாலம் தொடக்கம் சைவம் இருக்கிறது. இறைவனின் காலமேசைவத்தின் காலம்.

இறைவனைப்பற்றிப் பலர் பல கூறலாம். எனினும் வாவர்க்கும் இறைவன் ஒருயனே. உண்மைச் சைவன் பிறரிலே இறைவனைக்காண்கிறுன். தன்னுள்ளேயும் இறைவனைக் காண்பான். பக்கத்துவீட்டு வேற்று மதத்தவனையும்கூட ஒரு சைவன்,

...த்தும் அவர்கள் கண்ட... ஒரு சிறிதேனும் இன்றைய விஞ்ஞானிகள் கண்டார்களில்லை.

திரு. கே. பி. ஹரன், புங்குடுதீவு மக்களின் சைவப்பற்றையும் விழாவையும் பாராட்டித் தமது ஆசியை வழங்கினுர்.

அதிகாலை ஐந்துமணிக்கு ஆலய வழிபாட்டுடன் விழா ஆரம்பமானது.

திரு. பொன். முத்துக்குமாரன் பேசுகையில், இறைவன் அடிமைத்தனமே சைவத்தின் இலக்கணம் என்றுர். இறையடிமையாயிருப்பதிலும் இறையடியார்க்கும் அடியாராய் இருப்பதையே சைவன் விரும்புகின்றுன் என்றும் கூறினுர்.


# சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

யாழ்ப்பாண பகுதி ஏஜண்ட்:

## என். எம். எஸ். அன்ட் பிரதர்

கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.


# யாழ். சிறைக்கு களு அல்பர்ட்

கொழும்பு, ஞாயிறு களத்துவாவை கொலை சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த சந்தேக நபரான களு அல்பர்ட் கொழும்பு பிரதம நீதவான் திரு. பி. ஜி. எஸ். டேவிட்டின் இல்லத்தில் சனிக்கிழமை மாலை சரணடைந்தார்.

'ரிமாண்டில்' வைக்கப்பட்டிருக்கும் களு அல்பர்ட் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு விரைவில் மாற்றப்படவிருக்கிறுர். வெலிக்கடைச் சிறையில் மற்றெரு சந்தேக நபரான வில்லிமாமாவும் போகம்பரை சிறையில் அல்பிரட் டி சொய்சாவும் வைக்கப்பட்டிருப்பதால் களு அல்பர்ட் யாழ்ப்பாணம் சிறைக்கு மாற்றப்படுவாரென்றும் இம்மாதம் 19ந் திகதி அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவாரென்றும் அறியப்படுகிறது.

## காங்கிரஸ் வெற்றி

சென்னை, ஏப். 30 தமிழ் நாட்டில் திருமங்கலம் சட்டசபைத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில்காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றுர். சுதந்திரா அபேட்சகர் தோல்வியடைந்தார்.

## விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், திங்கள் காங்கேசன்துறை பொலிஸ் பகுதியில்இருந்துவரும்அச்சுவேலி, விரைவில் கோப்பாய் பொலிஸ்பகுதியுடன்இணைக்கப்படவிருக்கிறது.


# அருந்துங்கள்!

## பால் சபையின் நீண்டகாலம் பாவிக்கக்கூடிய

# பால்




## குளிர்ச்சியூட்டத் தேவையற்ற பால்

யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்



வடபகுதி **ரொபியலாக் (ROBBIALAC)** பெயின்ட் விநியோகஸ்தர்

**நந்தி** இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்சீஸ் லிமிடெட்
20, ஸ்டான்லி வீதி
108, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே. பி. எச். 5

# யாத்திரைக் கடிதங்கள்

அன்புள்ள சரஸ்,

"தமிழ்நாடு" பத்திரிகைக் காரியாலயத்தில்சேர்ந்தது 1929-ம் வருஷம் நவம்பர் மாதம் 9-ந் திகதி. அதற்கு முன்பாகவே ஒரு பத்திரிகையின், அல்ல, ஒரு சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தேன்! உண்மைதான். முதலில் அதுஎனக்கே ஞாபகமில்லை. வாலிபர் சங்கக் காரியதரிசியாக இருந்தேனல்லவா? அச் சமயம் சங்கத்தின் ஆதரவில் "யூத் லீக் மாகஸீன்" [வாலிபர் சங்க சஞ்சிகை] ஒன்றை ஆரம்பித்தோம். அது ஒரு கையெழுத்து சஞ்சிகை. என்னையே சங்கத்தார் அதன் ஆசிரியராக நியமித்தனர். ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகளை தக்கவரிடமிருந்து சேமித்தோம். அந்த ஊரில் மிகப்பெரிய மனிதர் மாவட்டநீதிபதிதான். அவரிடம் கேட்டதும் ஆங்கிலத்தில் நீண்டதோர் கட்டுரையைக் கொடுத்துதவினார். ஆங்கிலம், தமிழ் இரு பகுதிகளிலும் தலையங்கங்கள் எழுதினேன். அவற்றை இப்போது படித்துப் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. ஆனால் அது எங்கே போயிற்றோ! முதல் இதழ் வெளிவந்தது. பலரும் பாராட்டினர். ஆனால் அதுவே கடைசி இதழாகும். காரணம் சங்கத்தில் பிளவு ஏற்பட்டு சிலர் பிரிந்த

எழு

ருந்தார். அவர் தஞ்சை தொகுதியிலே காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்டு, டில்லி சட்டசபையின் பிரதிநிதியாகவும் அச்சமயம் இருந்தவர். அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் காரியதரிசியாகவும் சில காலம் தொண்டாற்றினார். பம்பாய் "இல்லஸ்டிரேடட் வீக்லி" என்ற வெள்ளைக்காரர் நடத்திய ஆங்கிலசஞ்சிகை, அவரது படத்தையும் போட்டு, "பிரபல பத்திரிகாசிரியர், அனல் விழுங்கும் அரசியல்வாதி" என்று முதியிருந்தது. முதல்முதலாக அவரை நேரில் கண்டு வாலிபர் சங்கத்தின் ஆதரவில் நடத்தும் கூட்டத்தில் பேச அழைத்தேன். ஒப்புக்கொண்டு அவரும் வந்தார். நல்ல கூட்டம். ஆங்கிலம் அறிந்தவர்கள் ஒரு சிலர்தான் இருக்கும். என்றாலும் அறியாமைகாரணமாக ஆங்கிலத்திலேயே அவரை வரவேற்று அறிமுகம் செய்தேன். அவரும்கூட ஆங்கிலத்திலேயே பேசினார்! அரசியல்வாதியான அவராவது தமிழில் பேசி இருக்கலாம். ஆனால் சங்கக் காரியதரிசி பேசிய மொழியிலேயே தாமும் பேசுவதுதான் பண்பு என்று அவரும் மக்களுக்குப் புரியாதமொழியில் பேசினார் போலும். "ராஜ பாஷையான" ஆங்கிலத்தில் பேசுவது அக்காலத்தில் ஒரு மதிப்பென்றும் கருதப்பட்டது. கூட்டத்திலிருந்த பலருக்கும் ஆங்கிலம் புரியாவிடினும் அமைதியாகவும் பொறுமையாகவுமிருந்தனர். இக் காலத்திலானால் விடுவார்களா?

அவரைப் பார்த்துப்பேசி, அவரை அறிமுகம் செய்து வைத்தபோது, என்னையும் அறியாமல் மனதில் எனக்கோர் ஆசை பிறந்தது. நாமும் ஒரு காலத்தில் ஒரு பத்திரிகை ஆசிரியர் ஆக மாட்டோமா என்ற எண்ணம். ஆனால் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா? இது நடக்கக்கூடிய காரியமென்று நினைக்கவில்லை. ஏனெனில் பெரிய அரசியல் தலைவர்கள்தான் பத்திரிகாசிரியராக வரமுடியும். இந்து, சுதேசமித்திரன் பத்திரிகைக் காரியாலயங்களிலே ஐயங்கார்களுக்குத்தான் இடம்கிடைக்குமென்று கேள்விப்பட்டேன். பத்திரிகைத் தொழிலில் பயிற்சி பெறுவதற்கான வசதிகளும் கிடை[illegible]. இந்

இனிமையாகப் பாடிக்கொண்டு ஆறுதலடைவார். 'அருகு நுனி பனி அனைய...' என்ற பெரியதோர் திருப்புகழை கண்ணை மூடிக்கொண்டு மெய்மறந்து பாடுவார். எனக்கு ஒன்றும் புரியாது. "டகுடகுகு டகு டகுகு டண் டுட்டு டட்டு டகு..." என்பது போன்ற திருப்புகழ் சந்தப் பாடல்கள் என்னைப் பிரமிக்கவைக்கும். வீட்டுக்கு வருபவர்கள், அத்தையாரை திருப்புகழ் பாடும்படி கேட்டுச் சுவைப்பார்கள். அப்பாடல்களையெல்லாம் கேட்கக் கேட்க தமிழிலே இவ்வளவு இருக்கிறதா என்ற பிரமிப்பு ஏற்படும். ஆனால் இதெல்லாம் அத்தைப் பாட்டிகளுக்குத்தான் என்

சிவபூசை செய்கையில் தலையிலே ருத்திராட்சத்தால் ஆனசிவலிங்கம். உடலெங்கும் விபூதி, ருத்திராட்சமயம். ஒவ்வொரு சோமவாரத்திலும் யாகம் செய்து, பின்னர் ருத்திராட்ச மண்டபத்திலிருந்து அபிஷேகமும் சிவபூசையும் முறைப்படி செய்வார். அத்தெய்வீகக் காட்சியை நினைத்தாலே மனம் புனிதமடைகிறது. அவரைப்போல் இனி எங்கே காணப்போகின்றோம்.

ஒவ்வொரு நாயன்மார் குருபூசையன்று மகேஸ்வர பூசை என்கிற அன்னதானம் நடக்கும், சும்மா இருக்கையில், "உ சிவமயம்" என்று எழுதிக்கொண்டே இருப்பார். எல்லாம் தவப்பொழுது. அப்பேர்ப்பட்ட மகான் செய்த சிவபூசைக்கு அற்ப தொண்டுசெய்யும் புண்ணியம் சிறுவயதிலேயே எனக்குக்கிடைத்தது. அவருக்குப் பின் அந்த மடத்தின் அதிபர்களாக வந்த சுவாமியார்கள், இரவில் தமிழ் வகுப்புகள் நடத்துவர். "பிரபுலிங்க லீலை" முதலியபாடங்களை சிற்சில நாட்கள்சென்று கேட்பேன். என்னையும் அறியாமலே என் வாழ்க்கைக்கு உண்மையில் பயன்படும் சைவ, தமிழ் பயிற்சிகள் எனக்குக் கிடைத்துவருவதாக அப்போது சிறிதும் உணரவில்லை. பள்ளிக்கூடங்களில் கிடைக்கும் பரீட்சை வகுப்பைவிட மடாலயங்களில் பெரியோர் போதிக்கும் ஆழ்ந்த கல்வி எவ்வளவு சிறப்பானது தெரியுமா?

ஒரு சம்பவம் எனக்கு நினைப்பு வந்தது. அங்கு குருபூசைகளில் நூற்றுக்கணக்கானவருக்கு மகேஸ்வரபூசை நடக்கும். ஒரு நாள் எல்லாருக்கும் இலை போட்டு கறிவகைகள், அன்னம் எல்லாம் பரிமாறியாயிற்று. வாளியில் சாம்பார் எடுத்து ஒவ்வொருவருக்கும் அன்னத்தின்மீது ஊற்றிக்கொண்டு சென்றேன். அடியார்களுக்குப்பூசை நடந்து கொண்டிருக்கிறது. 'சாம்பசதாசிவ சாம்பசதாசிவ..' என்றசிவ நாமம்ஒலிக்கிறது. அச்சமயம் ஒருவர் 'ஏ சாம்பாரு சம்பாரு' என்றுஎன்னை அழைத்து மற்றொரு கரண்டி ஊற்றச்சொன்னார். கோபம் வந்துவிட்டது. சிரட்டையாலான சாம்பார்கரண்டியால் அவர் தலையில் ஓங்கி அடித்துவிட்டேன். ஆமாம் நல்லவேளை விபரீதம் எதுவும் நடக்கவில்லை. சுவாமியார் பார்த்தார். மகேஸ்வரபூசை முடிந்தபின் என்னைத் தனியே அழைத்து அடியார்கள் எல்லாரும் சிவபெருமானின் வடிவங்கள[illegible] களுக்கு அன்னமளிப்பது சிவபெருமானுக்கே பூசை செய்வதாகுமென்றும்

---

## காலம் மறக்காதகவிஞன் — V

# பிள்ளைப் பிராயத்திலே........

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 'நாசரத்' என்ற ஊரில் பாதிரியார் ஒருவர் 'பிரைமரிபோர்டு' தலைவராயிருந்தார். பிரைமரி தேர்வில் தேர்ந்து சான்றிதழ் வாங்குவது சிறந்ததாக அக்காலத்தில் கருதப்பட்டது. பாரதியார் படித்த ஆங்கிலோ வர்னாக்குலர் பள்ளித் தலைமைஆசிரியர் சங்கரஅய்யர், சில மாணவர்களுடன் பாரதியையும்அத்தேர்வுக்கு அனுப்பிவைத்தார். தனக்குத்தெரிந்த ஓர் ஆங்கிலப் பாடலைப்பாடுமாறு பாதிரியார், பாரதியை வினவினார். 'டுவிங்கில், டுவிங்கில் லிட்டில் ஸ்டார்' என்ற பாடலை பாரதி இனிமையாகப்பாடியது கேட்டுப் பாதிரியார் மனமகிழ்ந்தார். 'இந்தச்சிறுவன் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவனாயிருந்தால் உடனே இலண்டனிலுள்ள ஏதாவதொரு சர்வகலாசாலையில் சேர்க்குமாறு இவனது தந்தையிடம் சொல்லுங்கள்" என்று சங்கர அய்யரிடம் சொன்னார். தமிழ்ப் பாட்டுக்களிலன்றி ஆங்கிலப் பாடல்களிலும் இளமையிலேயே கவிஞர் தோய்ந்திருந்தமைக்கு இந்நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும்.

எட்டயபுரம் மன்னருக்கு கவிதையிலிருந்தஆர்வத்தை அறிந்துகொண்ட பாரதியார், தம் தாய்வழிப்பாட்டனாராகிய இராமசாமி அய்யருடன் தகப்பனாருக்குத் தெரியாமல், சமீனுக்குச் சென்று மன்னரிடம் தான் இயற்றியகவிதைகளைப்படித்துக்காட்டி, அவரிடம் பாராட்டுதலைப் பெறுதல் வழக்கமாயிற்று. சின்னசாமி அய்யரிடம் ஒருநாள் மன்னரே பாரதியின் கவிதைத் திறன்பற்றிக் குறிப்பிட்டு மகிழ்ந்ததையும், அவர் மறைந்திருந்து தன் பிள்ளையின் கவிப்புலமை கண்டு இறும்பூது எய்தியதையும் செல்லம்மாள்பாரதி தனது நூலில் இவ்வாறு குறிக்கிறார்கள்.

"அய்யரது சுபாவத்தை நன்கறிந்த சமீன்தார், 'சின்னசாமி! உங்களிடம் நான் வேடிக்கை பேசுவேனோ? நம்ப சுப்பையா அருமையான கவிதைகள் எழுதி என்னிடம் கொண்டு வந்து வாசித்துக் காண்பிப்பான். பண்டிதர்கள் கூடக் குறைசொல்லாதபடி தன்னுடைய பிள்ளைக்கவிதைகளில் நவரசங்களும் சொரிந்து எதுகை, மோனை அமைப்புக்களுடன் உயர்ந்த கருத்துக்களை எளிய பதங்களில் அமைத்திருக்கிறான். அப்பாடல்களுக்குக் கிளை மொழியில் அவன் அர்த்தம் சொல்வதைக் கேட்கும்போது அவன் சுப்பையா என்பதே எனக்கு மறந்து போய், பட்டினத்தாரோ, தாயுமானவரோ, குமரகுருபரரோ இந்த உருவெய்தி எமக்கு அறிவுறுத்த வந்தாரென எண்ணி என்னை மறந்துவிடுகிறேன். உங்களுக்கெதிரில் அவனைப் பாடச் சொன்னால், பயத்தினாலும், வெட்கத்தினாலும் பாடமாட்டான். அவன் இங்கே வரும்சமயத்தில் ஒளிந்திருந்து பாருங்கள், உண்மை விளங்கும்' என்றார். அது கேட்ட ஐயர் மனம் பூரித்தது."

சின்னசாமி ஐயருக்குத் தனது பிள்ளை படித்துப்பட்டம் பெற்றுத் தான்கண்ட கனவை நனவாக்குவான் என்ற நம்பிக்கை வரவரத் தளர்ந்தது. அதே நேரத்தில் பிள்ளையின் கவிப்புலமை எட்டயபுரம் மன்னரையே ஈர்த்து மகிழச் செய்துள்ளதையும் உணர்ந்து, பெருமைப்படவும் செய்தது. தனது பெருமுயற்சி தன் பிள்ளையிடம் பயன்தராத வருத்தம் ஒருபால், பிள்ளையின்கவிதாசக்தியைவியந்து, சமீன்தாரே பாராட்டும் மகிழ்ச்சி ஒருபால்- இப்படி இருவகையான உணர்ச்சிகளிடையே ஏது செய்வதெனச் சின்னசாமி ஐயர் விழித்தார். ஆனாலும் தான் செல்லும் இடங்களெல்லாம் தன் பிள்ளையின் மேதையை வியந்துபேச அவர் தவறுவதில்லை. பாரதியின் கவித்துவத்தில் அவர் தந்தை கொண்டிருந்த மதிப்பை அறிஞர் வ. உ. சி. அவர்கள் எழுதிய கட்டுரைவாயிலாக நாம் அறியலாம்.

"ஒட்டப்பிடாரத்தில் தாலுகாக் கச்சேரியும், தாலுகா மாஜிஸ்டிரேட் கோர்ட்டும் இருந்துவந்தன. இவ்விரண்டு கச்சேரிகளில் ஏதாவதொன்றில் 'ஜோலி' யாகவே, எங்களூருக்கு ஸ்ரீமான் ஐயர் என்தந்தை யாருடன் வருவார். அங்கு வந்த காலத்தில் என்வீட்டிலாவது, என் வீட்டிற்கு மேற்கேயுள்ள பழைய பாஞ்சாலங்குறிச்சித் தானுபதிப் பிள்ளை வீட்டிலாவது தங்குவார். அப்பொழுது எனக்குப் பதினைந்து அல்லது பதினாறு வயதிருக்கும். ஸ்ரீமான் ஐயர், என் தந்தையாரிடமும், என்னிடமும், மற்றையோரிடமும் பேசிய மாதிரியிலிருந்து அவர் ஒரு பெரிய மேதாவி என நான் நினைத்தேன்.

"என் தகப்பனார் என்னிடம் ஸ்ரீமான் ஐயருக்கு ஒரு மகன் இருப்பதாகவும், அவன் அதிபுத்திசாலியென்றும், சிறுபிள்ளையாயிருக்கும் போதே, தமிழில் வெகு அருமையாகச் சுயம் பாடுவான் என்றும் கூறுவதுண்டு. ஐயரது குமாரன் பாடிய கவிகளை என்னிடம் சொல்லிக் காட்டி, அவனைப்பற்றி என் தந்தை வெகுவாய்ப் புகழ்ந்து பேசுவார். சிறு வயதிலேயே கவி பாடிய அச்சிறு பிள்ளைதான் சுப்பிரமணிய பாரதி என்று இன்று உலகமெல்லாம் புகழ் பெற்று விளங்கும் பெரியார்."

சமீன்தாரின் சித்தப்பாவும், அவர் சந்ததியின்றிக் காலமானபின் பட்டத்துக்கு வந்தவருமான எட்டப்பநாயக்கரும் இளம் பாரதியின் கவிதைப் பெருக்கில் ஈடுபட்டார். (பாரதி, ஆறேழு வயதில் இயற்றிய பாடலொன்றை இவர் அச்சேற்றிப் போற்றினரென்பர். ரா. அ. பத்மனாபன் அவர்கள் இவருக்கே, புதுவையிலிருந்து வந்த பின்னர் பாரதியார், சீட்டுக்கவி விடுத்தது.) சமீன்தாரின் பெருமதிப்பிற்கு ஆளான பாரதி, அவரால் அவைக்களப் புலவரிடையே அறிமுகப்படுத்திவைக்கப் பட்டதோடு விரைவில் அப்புலவர்களைக்கொண்டே அரங்கேற்றமும் செய்து வைக்கப்பெற்றார்.

எந்தப் பா வகையில் எழுதச் சொன்னாலும் உடனே எழுதித்தருவதும், ஈற்றடி கொடுத்துப் பாட்டை முடிக்கச் சொன்னால் முடித்துக் கொடுப்பதும், இன்ன பிறவுமான சோதனைகளில்வெற்றி பெறுவதென்பது சிறுவன் சுப்பையாவைப் பொறுத்த மட்டில் மிக எளிதான செயலே! பிறகென்ன? எட்டயபுரம் சமீன்தார் முன்னிலையில், சமஸ்தானப் புலவர் குழுவில் "பாரதி" (கலைமகளின் அருளுக்குப் பாத்திரமானவன்) என்ற பட்டம் 1893-இல் அவரது 11 வது வயதில் அளிக்கப்பட்டது. 15 வது வயதில் இவருக்கு மணம் நடந்த போது பட்டம் அளிக்கப்பட்டதாக நாவலர் சோமசுந்தர பாரதியார் கூறுவார்.

'பாரதி' பட்டம் வேறொரு நிகழ்ச்சியின்போது தரப்பட்டதாக சக்திதாசன் சுப்பிரமணியம் கூறுகிறார். "எட்டயபுரம் சோதிட வித்துவான் குருகுகதாசப் பிள்ளை வீட்டிற்கு பாரதி அடிக்கடி வருவார். அது 1896-ஆம்ஆண்டு. திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் மெட்ரிகுலேஷன் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த பாரதி செலக்ஷன் தேர்வில் தோற்றுவிட்டார். நவம்பர் மாதக் கடைசியில் ஒருநாள் சோதிடர் வீட்டுக்கு வந்த விருதை சிவஞானயோகியார் என்பவர் பாரதி படிப்பில் தோற்றதை ஏளனம் செய்தார். 'பட்டம் பெறுவதற்காகப் படிக்கவில்லையே நான்' என்றார் கவிஞர். யோகியாரும், கவிஞரும், 'கல்வி' பற்றி விவாதித்தனர். அன்றைப் பொதுக் கூட்டத்தில் 'கல்வியின் திறன்' என்ற தலைப்பில் கவிஞர் பேசினார். அவரது திறன் கண்டு வியந்த சிவஞானயோகியார் குருகுகதாசர் வீட்டில் சுப்பையாவிற்கு 'பாரதி' என்ற பட்டத்தைத்தந்து மகிழ்ந்தார்.

'பாரதி' என்ற பட்டத்தை இவருக்கு முன்னால் பெற்றோர் இருவரே. நந்தனார் கீர்த்தனையை இயற்றிய கோபாலகிருஷ்ண பாரதி ஒருவர்; இசைப் பாடலியற்றிய கவிகுஞ்சர பாரதி மற்றவர்.

**சு. சண்முகம் எம். ஏ.**

---

# அகிலம் போற்றும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எ
ழு
து
ம்

துடன், முக்கியஸ்தர்களான வாலிபர்கள் வேலை தேடிக் கொண்டு ஊரை விட்டுச் சென்றுவிட்டனர். சஞ்சிகை எப்படி நடக்கும்!

ஃ

அச்சமயத்தில் சென்னை ''இந்து'' பத்திரிகைக்கும், அதற்குமுன் ''சுதேச மித்திரன்'' பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்த ஏ. ரங்கசாமி ஐயங்கார் அவர்கள் திருவையாற்றுக்கு ஒரு சொந்தக்காரியமாக வந்தி

குத்தான் இடம்கிடைக்குமென்று கேள்விப்பட்டேன். பத்திரிகைத் தொழிலில் பயிற்சிபெறுவதற்கான வசதிகளும் கிடையா. இந் நிலையில் எதுவுமே அறியாமல், மெதுவாக என்னைப் பத்திரிகைப் பணியில் சேர்த்துவிட்ட அந்தத் திருவருளின் திட்டத்தை இப்போது நினைத்துப் பார்க்கையில் நம்பமுடியாத வியப்பளிக்கின்றது, சரஸ்!

தமிழை முறையாகக் கற்காவிடினும், அதன் இனிமையைச் சுவைக்க சிறுவயதிலேயே எனக்கு நல்ல ஒரு வாய்ப்பு கிடைத்தது. எப்படித் தெரியுமா? நமது வீட்டிலே என் அத்தையார் [தந்தையின் தமக்கையார்] சிறு வயதிலேயே புருஷனை இழந்தவர். தேவாரம், திருவாசகம், திருவருட்பா, திருப்புகழ் முதலியவற்றை

வி

பாட்டிகளுக்குத்தான் என்றும், ஆங்கிலம் படித்து இஞ்சினியராகப்போகின்ற(?) எனக்கு ஒன்றும் தேவையில்லையென்றும் அச்சமயம் கருதி ஒருவித அலட்சியமாக இருந்தேன்.

ஃ

அதுமட்டுமல்ல, அங்கு நம் வீட்டுக்குப் பக்கத்திலே அறுபத்துமூவர் மடாலயமொன்றுண்டு. தஞ்சையைச் சேர்ந்த ஒரு சைவவேளாளர் மலாய் நாட்டுக்குச் சென்று கடைவைத்து வியாபாரம் செய்து, பெரும் பொருள் ஈட்டி, துறவியாகி, திருவையார் வந்து அழகான மடம் அமைத்து சிவபூசையும், குருபூசையும் நடத்துவார். சிங்கப்பூர் சாமியார் என்கிற ஸ்ரீலஸ்ரீ முருகேச சுவாமியாரின் சிவத்தொண்டைப்பற்றி எழுதுவதென்றால் அது ஒரு பெரிய சரித்திரமாகும். நாமறியாத எவ்வளவோ மகான்கள் சைவத்தையும் தமிழையும் எப்படி எல்லாம் தியாகம் செய்து வளர்த்திருக்கிறார்கள் தெரியுமா?

ருத்திராட்சத்திலுலேயே இரு பெரிய மண்டபங்கள். ஒன்றுக்குள் அழகான பெரிய வெள்ளி ரதம். அதில் தங்கத்தாலாகிய ரிஷபம். அதன்மீது, அபரஞ்சி (மிக உயர்ந்த சுத்தத் தங்கம்) யாலான கவசம் மூடிய, ஸ்படிக லிங்கம். அந்தக் கவசத்திலே வைரத்தால் மூன்று பட்டை விபூதி. ஸ்வர்ணத்தாலான நீண்ட வில்வதள மாலை. தங்கவேலாயுதம். வாயிலே நவரத்ன கஜம் கட்டிய 18 வலம்புரி சங்குகள். 108 வெள்ளிக் கலசங்கள். வெள்ளி கட்டிய 108 பெரிய இடம்புரி சங்குகள். தங்க உருவத்துடன் கூடிய காண்டாமிருகக் கொம்பு, மான்கொம்பு முதலியனஅபிஷேகங்களுக்கான பல பல வெள்ளி தொன்னைகள். தங்கக் கலசம். அதன் வாயிலே நவரத்னங்கள் பதித்திருக்கும். ஏகதாரைக்கான தங்கச் சொம்பு. தங்கத்தாலாகிய விபூதி மடல், அதைச் சுற்றி வைரத்தால் இழைத்த வில்வ மாலை. நம்பமுடிகிறதா? ''என்னைச் சிங்காரித்து என் அழகைப் பாராமல் உன்னைச் சிங்காரித்து இருந்தேன் பராபரமே'' என்று தாம் ஈட்டிய பொருள்களையெல்லாம் இவ்விதம் சிவப்பணிக்கே அர்ப்பணித்தார் அப்பெரியார்.

...லாரும் சிவபெருமானின் அடிவங்களென்... களுக்கு அன்னம்பாலிப்பது சிவபெருமானுக்கே பூசை செய்வதாகுமென்றும் விளக்கி, அடியார் பெருமையையும் அன்னதானத்தின் தத்துவத்தையும் உணர்த்தினார்கள். அன்றுசெய்துவிட்ட பெரிய அபசாரத்தை இன்று நினைக்கவும்மனம் கூசுகிறது. என்றாலும்அதன்பயனாக அடியார் பெருமையைப்பற்றி அன்றுபெற்ற நல்லதோர் உபதேசம் சைவத்தின்மாண்பையும் எவ்வளவு உணர்ச்சியுடன் சிவப்பணியாகியசமூகப்பணியைச் செய்யவேண்டுமென்பதையும் மறக்கவே முடியாதபடி எனக்கு அறிவுறுத்தியது.

இதையெல்லாம்பற்றிஏன் எழுதுகிறாய் என்று நீ கேட்கலாம். என் பத்திரிகை வாழ்க்கைக்குமூலப்பொருள்களான தமிழ், சைவஅறிவை என்னை அறியாமல் எனக்குச் சிறிது புகட்டிய இப்பெரியார்களை எப்படி மறக்கமுடியும்? மறந்தால் அது நன்றி உடைமையாகுமா?

உன் அன்புள்ள,
**அப்பா.**

# நமக்கொரு நாள்

**— இ. நாகராஜன் —**

காட்டை அழித்துக் கழனிகளைக் கண்டெழிலார்
வீட்டை வியன்தெருவை விண்முட்டும் மாடிகளை
ஆக்கி உலகத்தோர்க்கான பசிபோக்கி
ஊக்கி உயிரூட்டி ஓம்பும் உயர்வுற்ற
பாட்டாளி வர்க்கத்தார் பாரில் உரிமைபெற
கூட்டணியாய் நின்று வெற்றி கொண்டவொரு
நாளிதுவாம்.

ஃ

சிங்களத்தை பேசுசில்வா செந்தமிழைப் பேசுகின்ற
கங்கா தரன், முகமத் கச்சிதமாய் ஆங்கிலத்தைச்
சொந்த மொழியென்னும் தோழர்பிறுன் யாவருமே
தந்தமக்குள் ஒன்றாக சகபாடி என்றுரைத்து
வர்க்கக் குரலெழுப்பி வார்த்தைப்போர்செய்யும்ஒலி
சொர்க்கத் திருப்போர்க்கும் சோதனையாய்த்
தானிருக்கும்

ஃ

ஆலைச்சங் கூதவுடல் ஆறுதலே கொள்ளாமுன்
சாலை வழியோடி தம் வயிறைப் பேணிடவே
காலைக் கதிர்கிளம்பி ககனத்தைச் சுற்றிப்பின்
மேலைத் திசைமறைய வேதனையே சூழத்தம்
உழைப்பால் இளைத்துண்ண ஊணு கிடைக்காது
களைப்பால் களையிழந்து காலமெலாம் பட்டதுயர்

ஃ

ஓடி மறைந்தொழிய உரிமைக் குரல்காட்டி
கூடிப் பலபேர்கள் கொண்டமுயற்சியினால்
கட்டு முறித்தகற்றி கடின உழைப்பதனை
வெட்டித் தொழிலாளர் வேதனையைத்
தீர்த்து வைத்த
மேதினமாய் இன்று விளங்கு மதனையிந்த
பூதலத்தே யாவருமே போற்றி வருகின்றார்

ஃ

இன்றைத் தினத்தில் இந்நாட்டு மன்னரென
ஒன்றி ஒருமித்து ஊக்க உணர்வுடனே
உரிமைக் குரல்காட்டி ஓய்வதிலே அர்த்தமில்லை
தரணி இதில் என்றும் தன்மானப் பண்புடனே
வாழ வழிவகுத்தால் வண்மையுடன் நம்மவரின்
ஈழம் எனும்நாடு இலங்குமிதை ஏற்போமே!

**ஒவ்வொரு மனிதனும் கொஞ்சம் வேலையாவது செய்துகொண்டிருப்பதையே நீ காண்கிறாய். ஏனெனில் மனித சுபாவமே அத்தகையது. அஃது அவனை ஏதேனுமொன்றைச் செய்துகொண்டிருக்க வேதூண்டும். உலக இயல்பு இவ்வாறிருக்க எவனொருவன் கால்மேல் கால் போட்டுக்கொண்டு சோம்பேறியாக உட்கார்ந்திருக்கிறானே, ஆனால் மனதில் மட்டும் அனேகவிதமான சங்கற்பங்களையும் விகற்பங்களையும் கற்பனை செய்துகொண்டிருக்கிறானே அவனை மூர்க்கர்களில்ஒருவனாகவே கருதவேண்டும். கள்ள ஆசாரமுடையவனாகவும் கூறலாம்.**

—கீதாபோதனையில் காந்திஅடிகள்.

# அகிலம் போற்றும் மே தின விழா

## உரிமையும் கடமையும் பேணப்படவேண்டும்

**அ**ன்று சிகாகோ நகரிலே தொழிலாளர்கள் செய்த புரட்சியின் பயனாக ஏற்பட்ட எட்டுமணி நேர வேலைச் சட்டம், இன்று உலகெல்லாம் செயல்பட்டு வருகின்றது. ஆனால் எம் மலையகத் தொழிலாளர்களை பொறுத்தமட்டில் எட்டு மணிநேர வேலை என்ற திட்டம்மாத்திரம் இருக்கின்றதேதவிர, அவைகள் நடைமுறையில் இருக்கின்றனவா என்றால் இல்லவே இல்லை!

இதுமாத்திரமன்றி இன்று ஏனைய தொழிலாளர்கள் அனுபவிக்கும் எத்தனையோ உரிமைகள், சலுகைகள் அற்று வாழ்ந்துவரும் தொழிலாளர்கள் எம் மலையக தொழிலாளர்கள்மாத்திரம்தான். அவர்கள் எல்லா தொழிற்சங்க உரிமைகள், சலுகைகள், அவர்களின் அரசியல் உரிமைப் பிரச்னைகள் யாவும் வென்றெடுக்கக் கூடிய காலமும் நேரமும் இருந்தும் அதை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க தொழிற் சங்கங்கள் முயற்சி எடுக்கவில்லை.

ஆனால் கழகம், கால்நூற்றாண்டு சங்கங்களை விட நான்கு வருடங்களில் தொழிலாளர்களின் துயர் துடைக்க பெரு முயற்சி எடுத்து பல அன்றாடப் பிரச்னைகளைத் தீர்த்துவைத்துள்ளது. என்றாலும் அவர்களின் அரசியல் பிரச்னைகளில் மாத்திரம் மிகமிக மோசமான நிலையில் இருந்து வருகின்றனர். இவர்களின் இந்நிலையை மாற்ற, இவர்களும் இந்நாட்டின் ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் எல்லா சலுகைகளையும் உரிமைகளையும் பெற்றுத்தர, அதற்காகப் போராடப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது. கழகம் எடுக்கவிருக்கும் இப் பிரச்னைகள், போராட்டங்

[5-ம் பக்கம் பார்க்க]

# ஒன்று திரளுங்கள்!

**வி. என். நவரத்தினம்**

[ இ. தொ. கழக தலைவர்-சாவகச்சேரி எம்.பி. ]

**மே** தினம் என்றதும் உலகத்தொழிலாள வர்க்கத்தின் ஞாபகம் வருகிறது. சோம்பேறிகளைத்தவிர, உலகமேதொழிலாள வர்க்கம் தானே?

ஆகவேதான் மேதினம் சாதி, மத, இன, மொழி, நாட்டு வேற்றுமையின்றி அகிலமெங்கும் கொண்டாடப்படுகின்றது. ஆலையில் வேலை செய்யும் தொழிலாளி முதல் கல்லூரி ஆசிரியன் வரை மேதினத்தைக்கொண்டாடுகின்றனர்.

### ஆச்சரியமே

இன்று முதலாளித்துவத்தின்கோட்டையெனஅழைக்கப்படும் அமெரிக்க நாட்டிலேதான். மே தினத்தின் சரித்திரம் இரத்தத்தினால் இட்டப்பட்டது என்பதை நினைக்கும்போது ஆச்சரியமேற்படாமலிருக்காது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிற்பகுதியில் சிக்காகோ நகரில் தொழிலாளிகள் எட்டுமணி நேர வேலை தரவேண்டுமெனப் போர்க்கொடி உயர்த்தினர். ஆட்சியினர் அவர்களில் பலரைச் சுட்டுக்கொன்றனர். ஆனால் போராட்டம்வெற்றிதந்தது சிக்காகோ உலக சரித்திரத்தில் இடம்பெற்றது. மே தினம் தொழிலாளர்இதயத்தில் இடம்பெற்றது.

### பாகுபாடற்ற கொண்டாட்டம்

இன்று மே தினம், தொழிலாளர் ஆட்சியமைத்துள்ள கம்யூனிஸ, சோஷலிஸ நாடுகளல்லாத முதலாளித்துவ

[5-ம் பக்கம் பார்க்க]

# இராமாயணமா, சீதாயணமா?

**காங்கேயன்**

**வ**ண்ணான்மொழிகேட்டு வனத்துக்கு அனுப்பிய சீதாதேவி வனமுனிவரோடுகாட்டில் வசித்த நாட்களையும் ஆசிரமத்தில் இரண்டுபிள்ளைகள்பெற்றதையும் ஸ்ரீராமன் சந்தேகிக்காமல் பிள்ளைகளையும் தாயையும் அயோத்திக்குத் திரும்பஅழைத்துச்செல்கிறவரை இந்த அவதாரத் தம்பதிகளின் காதல்வாழ்வு இந்தமட்டில் சுபமங்களமாக முடிகிறதே என்று நாம் திருப்திப்படுகிறோம். ஆனால், சீதாதேவிக்கோ ஸ்ரீராமனோடு நடத்திய காதல் வாழ்வு போதும்போதுமென்றாகிவிடுகிறது. எப்பொழுதோ ஒருசமயம் அரண்மனை உப்பரிகையில் நின்றபோது முதல்முறையாக இராமனைப் பார்த்தாள். பார்த்தமாத்திரத்தே அவனிடம் மனதை இழந்தாள். கவிவாக்கில், அண்ணலும் நோக்கினான், அவளும்நோக்கினாள். அங்கே அப்பொழுது தொட்டது சனியன். முடிவில் ஒருவரை ஒருவர் பார்க்கவே கூடாது என்று வாழ்க்கையில் தீராத கசப்படைந்ததுபோல ஜனககுமாரி நிலத்தைப் பிளந்து மண்ணுக்குள்ளே மறைந்து போய்விடுகிறாள். ஸ்ரீராமனுக்கு மீண்டும் தவிப்பும் தாபமும். ஜனககுமாரியை எந்த மண் பிரசவித்ததோ அதே மண் திரும்பவும் அவளைத் தன் வசம் சேர்த்துக் கொண்டபோதுதான் அவளது பிறவித்துன்பம் அத்துடன் முற்றுப் பெறுகிறது. இராமாயணமாஅல்லதுசீதாயணமா?

ஆணும் பெண்ணுமாக இரு பறவைகள். ஒன்றை விட்டு மற்றது பிரிந்துபோய் விடுகிறது - இறந்து விடுகிறது. ஒன்றாயிருந்து இவ்வாறாகப் பிரிக்கப்பட்ட அந்த ஜோடிப்பறவைகளில் ஒன்றினது சோகத் துடிப்பையும் அது பட்ட துயரத்தையும் பறவைகளில் ஒன்றைக் கொன்றுவிட்டவன வேடனே பார்க்க நேர்ந்தபோது அவன் மனத்தில் எழுந்த உணர்ச்சி ஓட்டமும் கணப்பொழுது மனஉளைச்சலுமே இராமாயண மகாகாவியத்துக்கு கருப்பொருளாக அமைந்ததென்றும், அந்த வனவேடன் பின்னர் வால்மீகிமுனிவர் ஆனதாயும் சொல்லப்படுகிறது. இந்த சம்பவத்தினால் வனவேடன்மனத்தில்உண்டான மாறுதல் அவன் வாழ்க்கையில் புதிய திருப்பத்துக்கு வித்திட்டது. பின்னாளில் வால்மீகி பாடியகாவியத்தில் காவ்ய தலைவன் - தலைவி பிரிவுத்தாபத்தை அத்தனை மெய்ப்பாட்டுணர்ச்சியுடனே வருணிப்பதற்கு முனிவருக்கு இந்த அனுபவமே பெருமளவு ஆதாரமாக அமைந்ததென்பர் காவ்ய நூல்வல்லோர். மிகச் சிறிய விதையில் வளர்ந்து பாரிய விருட்சமாகக் கிளை பரப்பிநிற்கும் ஓர் ஆலமரத்தைப் போல ஒரு நொடிப் பொழுதுகதையிலே எத்தனை பெரிய காவ்யமாளிகையும் கலைத்தோப்பும் அழிவற்ற சித்திரகூடமும் எழுந்துவிட்டன. தமக்கென்று ஓர் உலகத்தைப் படைத்து அதிலே தனி அரசோச்சி வாழும் வால்மீகி போன்ற மகரிஷிகளாலன்றி வேறு எவரால் இது போன்ற மாபெரும் சாதனைகளை நிலைநாட்டமுடியும்?

''நீ சிருஷ்டித்த காவ்ய நாயகி படும் பாட்டைப் பார்'' என்று காவ்ய முனிவரிடமே சொல்வது போல சீதாதேவியை வால்மீகியிடமே கொண்டுபோய் ஒப்படைத்துவிடுகிறது உத்தர ராமாயணக்கதை. தாய்மை அடைந்திருக்கும் ஓர் அரசகுமாரியை ஆசிரமத்தில் வைத்துப் பாதுகாத்து அவளது நலம் காக்கும் பெரும்

[6-ம் பக்கம் பார்க்க]

## நினைவும் கனவும்

## இவ்வாரச் சிறுகதை

# அருவியின் அழைப்பு

இரண்டு மூன்று தினங்களாக அடைத்தாற்போல விடாமழை பொழிந்த வானத்தில் கருமேகங்கள் விலகிசூரியன்முகம் காட்டத் தொடங்கியது. நீடித்த மழைக்குப்பின் தோன்றும் வெயில், நீண்ட இரவுக்குப் பின் தோன்றும் பகலொளியைப்போல மனோகரமாய் மனரம்மியமாய் இருக்கும். யாழ்ப்பாண நாட்டில் ஐப்பசி மாதத்து அடைமழை காலங்களில் இந்த மழை வெளிப்புக்கும் வெயிலுக்கும் உள்ள வரவேற்புஒரே களியாட்டக்கோலாகலமாயிருக்கும். வீட்டுக்குள் போர்த்து மூடி சுருண்டுகிடந்தவர்கள் காலையும், கையையும்கட்டிப்

லாம் குளித்து முழுகிப் புதுமைக் கோலம்கொண்டு இளங்காற்றில் அசைந்து ஆடிச் சிரித்து சிலுசிலுத்து நிற்கின்றன. இரு தினங்களும் குளிருக்கும் தொடுகும் கூதலுக்கும் ஒதுக்காக எங்கெங்கோ பதுங்கி மறைந்திருந்த பறவை இனங்கள் கதிரவன் வரவுகண்டு குதூகலித்து வெளியே பறந்து புதுமைஎழுச்சிபாடுகின்றன. அதோ, அந்த வெள்ளை அலரிகளின் இதழ்களிலே மின்னிப் பளிச்சிடுவது மகிழ்ச்சிக்கண்ணீர்த் துளிகளா? வெளியே மழையிலும் வெயிலிலும் நனைந்து பூமித் தாய் இவ்வாறு எழில் பூக்கி யன்னராடாக என்னை

வீடுகள் கட்டி எழுப்பியிருப்பவர்கள் இப்பகுதி பூகர்ப்ப இரகசியம் தெரிந்தவர்கள் தாம். அந்தப்புதுவீட்டுப் பெண்மணிகள் சிறுசுகளும் பெரியவர்களுமாகக் காலையிலே கூட்டமாக வந்து அருவிகளில்குளியடித்து நீராடிவிட்டு கூந்தல் காற்றில் புரளமனக்கிளுகிளுப்புடனே திரும்பியபோது - ஒவ்வொருத்தியும் ரம்பையும் ஊர்வசியுமாக-சே சே, அந்த கோழ இராசகுமாரத்தி மாருதப்புரவிகவல்லியாக

போட்டாற்போல முடங்கிக் கிடந்தவர்கள் வெளியே தலைநீட்டிகார்மேகம்கலைந்து களங்கமற்று நிர்மலமாய், நிர்ச்சலனமாய் கிடக்கும் நீலவானைப்பார்த்து மனதில் உவகை பொங்கநின்றுமனப் பரவசமடைவர். எழில் கொழிக்கும் வானவில் அப்பொழுது ஆகாயத்தில் இருக்காது-அவர்கள் ஒவ்வொருவர் மனத்திலும் தான் தோன்றும்.

கோடைகாலத்தில் தகித்துப்பொசுக்கும் வெங்கதிரோனிடமிருந்து உலகமாந்தரைப் புரப்பதற்காக இவ்வாறு சில மாதகாலம் நமக்குப் பட்டுக் குடைபிடித்து பச்சைக்கம்பளம் விரிக்கும் வருணதேவனுக்கு அந் நன்றி மறக்காமல் மழைக் காலம் முடிவடைய ஆதவனுக்கும் சேர்த்தே பொங்கலும் பூசையுமிட்டு வழிபடுகின்றனர். நிழல் அருமை வெயிலில்தானே தெரிகிறது. நாம் குடியிருப்பதோ பரந்த வானத்தின் கீழ். மழை, காற்று, இடி மின்னல்களைப் பொருட்படுத்தாமல் வாழ முடியுமா? போராடுகிறோம், சரணடைகிறோம். இன்று நேற்று முதலா, ஆண்டாண்டுகாலமாய்-யுகயுகாந்தரமாய்...

அன்றைக்கு ஐப்பசி வெள்ளி. கந்தசஷ்டி தொடங்கி மூன்றாம்நாள். காலையிலெழுந்து நான் பஸ்ஸுக்கு காத்து நின்று வேலைக்குவந்துசேர்கிறவரை ஒரே மழை. வீட்டில், வரும் வழியில் இங்கே இந்தமாடிக் கட்டிடத்தில்எங்குமேதாரை தாரையாக தண்ணீர். கால் வைத்த இடமெல்லாம்ஒரே ஈரக்கசிவு, ஊறிச்சுவறும்

அழைக்கவே, அலுவலகச் சுவர்க்கூட்டுக்குள் மேசை முன் காலை மடக்கிப்போட்டு உட்கார்ந்திருக்க ஆற்றாமல் சகபாடிஒருவனிடம்சொல்லிவிட்டு வெளிக்கிளம்பிவிட்டேன்.

எங்கே வீட்டுக்கா?

வீடும் மண்ணாங்கட்டியும்!

கீரிமலை நீரூற்றுப்பக்கம் தான் கிளம்பினேன். இந்தக்கணம்வரை பெய்தமழை அங்கே பளிங்கனைய சிற்றருவிகளாக களகளவென்று கற்பாறைக்குன்றுகளில்ஊற்றெடுத்துக் கடலைநோக்கி பாய்ந்துகொண்டிருக்கும். கடல் அலைகள் சோ சோ வென்று இரைந்து வந்து கரையோரம் கிடக்கும் கற்களிலே மோதி மழைத்துளிகளாகச் சிதறி நம்மேல் பன்னீர் தெளிக்கும். நீண்டு கிடக்கும் கடற்பரப்பைப் போல அதன் எதிர்ப்பக்கத்தே செடிகொடிகளும் புல் பூண்டும் கல்மேடுமாகப்பரந்துகிடக்கும் அகண்ட வெளியோ பார்த்துக் கண் கொள்ளாது. யானைப்படை, ஒட்டகப்படை போல அடுக்குத்தொடராக சேர்ந்து திரண்டு வளர்ந்தோங்கி நிற்கும் கடலோரக்குன்றுகளின் மேல் நின்று பார்த்தால் திரை எறியும் அக்குன்றுகளின் அடிவயிற்றில் புத்தம் புது அருவிகள் ஊற்றெடுத்து ஒவ்வொன்றும் கிளைவிட்டு தனித்தனி ஓடையாகவும் வாய்க்காலாகவும் பெருக்கெடுத்து கட்டுமீறி கரைபுரண்டு தாயிடம் தாவிப் பாயும் சிறு குழந்தை போல கடலை நோக்கி விரையும் காட்சி-நாள் முழுக்கப் பார்த்து அநுபவிக்கக்கூடிய தொன்... நீராட இறங்கி

அல்லவோ புதுமை அவதாரம் பெற்றுவிடுகிறாள்.

கூண்டுப்பறவை வான வெளியிலே பறந்தோடிப் போனதைப்போலத்தான் நானும் என் சைக்கிளை எடுத்துக்கொண்டு அதில் ஏறிப் பறந்தேன். கேணியில் எல்லாப்படிக்கட்டுகளையும்மேவி தண்ணீர் நிறைந்து வழிந்து தளதளத்தது அப்பழுக்கற்ற தெளிந்த நீர். கடற்கரையோரமாக மலைக்குன்றுப்பக்கம் பாய்ந்த அருவியை மறந்துபோனேன். சைக்கிளை ஒரு பக்கம் போட்டுவிட்டு வேட்டியை அவிழ்த்து இடுப்பில் சால்வைத்துணியைச் சுற்றிக்கொண்டு கேணியிலிருக்கும் தண்ணீர்கடலுக்குப் பாயும்வாய்க்கால் ஓடையில்

போய் இறங்கினேன். வேட்டியை தண்ணீரில் தோய்த்தெடுத்து கல்லில் இரண்டு தட்டுத்தட்டி அலம்பி எடுத்துக்கொண்டே மறுபடி கேணிக்குச்சென்று நீராட இறங்குவதற்கு முன்பாக வாய்க்காலோரமாகக் குவிந்து கிடந்த கல்குவியல் மேல் ஏறிநின்று துணியை என் இருகையிலும் விரித்து கடல்காற்றில் அது படபட வென்று அடித்துப் பறக்க உலரவிடலானேன்.

''கதிரி அல்லோ மோசம் போய்விட்டா, தம்பிக்குத் தெரியுமோ?''

கேணி ஓடைக்குள்ளேயிருந்துதான் ஒரு குரல் எழுந்

கதிரி, கலட்டிக்குடியிருப்பு என்ற தாழ்த்தப்பட்டவகுப்புக்குடிமக்கள் பண்ணையில் நெடுங்காலமாகத் தரித்து நின்ற ஒரு நிழல்மரம். இங்கிருந்து சமீபத்தில் மழைக்கால அருவிபாயும் மலைக்குன்றுகளுக்கு நேர் தெற்கே இரண்டு தெருக்களையும் தாண்டி காட்டுவெளியில் முன்னூறு குடிகளை மட்டில்கொண்ட அந்தக்குடியிருப்பு இருக்கிறது. எங்களூர்களிலே கிறவல் றோட்டுகளே எங்கும் போட்டிருந்த காலத்தில் தெருவேலைகளுக்காகத் தெருவோரம் குவிக்கப்படும் கற்குவியலுக்கு கல்லுடைத்துக் கொடுக்கும் கூலிவேலைக்குப் போவாள் கதிரி. அந்தப்பண்ணையில் பெரும்பகுதி ஆட்களும் இவ்விதம் அன்றாட கூலி வேலைக்குப்போய் பிழைத்தவர்கள் தாம். கதிரியின் மகனும் அவன் பெண்டாட்டியும் ரயில்பாதைக் கற்குவியலுக்குக் கல் உடைத்துகொடுக்க காங்கேயன்துறைக்குப் போனார்கள். அந்தவேலைக்குப்போகாத காலத்தில் ஏவல், தொண்டுதுரவுவேலைகளுக்குச் சுற்றயல் கிராமங்களுக்குப் போனார்கள். புயல் காற்றும் பெருமழையும் அசைத்தும் பார்க்கமுடியாத நேர்த்தியான மண்சுவர் வைத்து வீடுகட்டிக்கொடுப்பார்கள். தங்களை ஆதரித்தவர்களின் வாழ்க்கையில் சம்பவித்த புயல் பெருமழையின் போதும் நெடுஞ்சுவராக நின்று அணைகட்டிக் காத்தவர்கள். அத்தகைய பொன்னான மனம் படைத்தவர்கள். கதிரி அவள் மகன் அன்றி பேரனோ பேத்தியோ ஒரு நாளைக்கு ஒருக்கால் எங்கள் வீட்டுக்கு வந்து சுற்றிக் கொண்டுதான் மேலே எங்கேயும் போவார்கள். எனது சின்ன வயது முதலே பார்த்துப் பழகியமுகம்.

காய்ந்து போய்விட்ட வேட்டி காற்றிலே படபட என அடித்தது. [illegible] மரமே ஆகிவி[illegible] [illegible]ரம் வற்றிப்போன தலை

— 'முருகு நீலாம்பரி' —

போல நீர்க்குமிழிகள். அடி நிலம்வெயிலில்பளிச்சென்று தெரிகிறது. என்ன அழகு!

— 2 —

இன்றைக்கெல்லாம் எங்கும் மின்சார வெளிச்சம் வந்துவிட்டது. எந்த இராவிருட்டிலும் பயமில்லாமல் எந்நேர பரியந்தமும் நீராடலாம். கேணிக்கு நடுவே தலைக்குமேல் குறுக்கே ஓடும் மின் இணைப்புக்கம்பியையும் அதில் தொங்கும் தீபக்குமிழையும் பார்த்துவிட்டு தொபுகடீர் எனத் தண்ணீருக்குள் குதித்துகீழேசற்றுத் தூரம் சுழியோடிச் சென்று தலையைத்தூக்கினேன். நல்ல வேளை ஒரு கற்பாறைமேல் சௌகரியமாக ஏறி நங்கூரம் பாய்ச்சி மார்பளவுநீர் மட்டத்தின் சுகத்தை அநுபவித்து நின்ற ஒரு பரம சாதுவை இடித்துக்கொள்ளாமலே தலையைத் தூக்கினேன். அப்படியான போதிலும்அந்த மனிதர் சற்றே மிரண்டு போனார் என்றே தோன்றியது. கால் தடம் புரண்டால் ஒருவேளை அவர் தலைக்கு மேல் வெள்ளம் போய்விடக்கூடுமோ, அதை முழு நிச்சயமாகச் சொல்ல முடியாது.

''கேணிக்குள்ளே இறங்கியவுடனே சில பேருக்கு ஒன்றுமே தெரியாமல்போய் விடுகிறது. இந்த தண்ணீருக்குள்ள குணம் அது''-அந்தச் சாது மனிதர்தான், அவர் கூட நின்று நீராடிய மற்றொரு சீவனிடம் இப்படிச் சொல்லி முறையிட்டு முணுமுணுத்தார்.

''மெய்தான். அருமையான தண்ணீர் இன்றைக்கு. விடியற்காலையில்கழுத்தளவு தண்ணீரில் நின்று பாட்டுப் பாடினால் என்ன சுதிபேசும். குரல் கூட சுத்தமாகிவிடுமாம். அது தெரியாமல் சும்மாவாயைச்செலவழித்து என்ன பிரயோசனம்? அதுவும் தண்ணீருக்குள்ள கோளாறுதானோ?'' அந்தப் பரமசாது யாரிடம் பேசினாரோ அதேஆளைப்பார்த்து நானும் இவ்வாறு சொல்லி வைத்தேன். என் பேச்சைக் கேட்டுக்கொண்டு அதற்குப் [illegible] கூறாமலே [illegible] நேரத்துக்குள்ளாக மூன்றாவது மனிதர் மெல்ல நழுவி வெளியேறிவிட்டார்.

''இரண்டுமணிக்குக்கிட்ட வாகுது'' என்றேன்.

''ஓ, இரண்டு மணியாகிறதா? நான் தண்ணீருக்குள்ளே வெகுநேரமாக நின்றுவிட்டேன் போலிருக்கிறது. இறங்கினால் எழுந்திருக்கமனம்வந்தால்தானே'' அவர் கூறி வாய்மூடுவதற்குள்ளாக பெண்கள் நீராடும் கேணிக்குள்ளிருந்து ஓர் அப்சரஸ் மின்னல் பளிச்சிட்டாற்போல வெளிவந்து ஆடவர் கேணிக்கரையில் நின்றபடி ''ஐயா, நான் மடத்துக்குப் போகிறேன். நீங்கள் வாருங்கள்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள்.

''ஓம் பிள்ளை நீ போ பின்னால் நானும் இதோ வருகிறேன்'' என்று அவர் கூறியதும் அந்தத் தோகைமயிலாள் மறைந்துவிட்டாள்.

அத்தருணம், கண் வழியாக என்முகத்தில் படர்ந்த உணர்வுரேகைகளைமறைப்பதற்காக இரு கையாலும் தண்ணீரை அள்ளிஎன்முகத்தில் ஊற்றிக்கொண்டுநின்ற என்னிடம் அந்தச்சாது மனிதர் ''இவ என் மகள் — ஒரே மகள். இவளினுடைய தாய்க்குத்தான் நேற்று இங்கே அந்தியட்டி செய்வதற்காக வந்தனாங்கள்'' என்றார்.

''ஓ அப்படியோ? ஏன் மடத்தில் நடக்குது அந்திரட்டி!

''நாங்கள் கனகாலமாய் வெளியூர்சீவியம். அதனாலே ஊரிலே இனசனக் கொண்டாட்டம் அவ்வளவாக இல்லை. இனிமேல்தான் எல்லாம் புதுப்பிக்க வேணும்.''

''அப்படி வெளியூர் சஞ்சாரம் எதனாலே?''-இந்தக் கேள்விக்குச்சற்றே நிதானமாகவே பதில் வந்தது.

''நான் நெடுகிலும் பஸ் கம்பெனியிலதான் வேலை பார்த்தனான், தம்பி. ஐயக்கோன் பஸ் கம்பனி நடத்திய காலத்தில் யாழ்ப்பாணத்தில் வேலைபார்க்கத் தொடங்கி அதற்குப்பிறகு இருபதுஇருபத்தைந்துவருசமாக கண்டி, காலி, மட்டக்களப்பு என்று பல ஊர்சீவியமாக நடந்தது.''

''நெடுகிலும் பஸ் கம்பெனிதான்-?''

''பஸ், கார், லொறி எல்லாம்தான்-தம்பிக்கு ஊர் எவடமோ?''

''யாழ்ப்பாணம் - அச்சுவேலி'' என்றேன்.

''அப்ப, இனி தோய்ஞ்சு குளிச்சிட்டுப் போகப் பொழுதுபட்டுப் போகுமே''

''நான் சைக்கிளில் வந்தனான். எந்தநேரமும் போய்ச் சேரலாம்.''

அதன்மேல் அந்தச் சாது மனிதர் ''அப்ப சரி தம்பி எனக்கு நேரமாகிறது. மடத்[illegible]

# பழமைக்கும் புதுமைக்கும் மாளாத போட்டி

''பாம்-பாம்-பாம்-பா-உ-பாம்''

''இப்பபோறம் வாருங்க வாருங்க வந்தேறுங்க. இண்டு முழுதும் ஒரு வஸ்ஸுமில்லை. இனிமேல் நாங்கள் நிக்கமாட்டம். கெதியாப் போகப்போறம்- ஏறுங்க''

''ஏறு மச்சான்-இனிப் போவம், வஸ் வெளிக்கிடுகுது''- சொல்லிக்கொண்டு வானை ஒருமுறை வலம்வந்து பிரயாணிகளை இன்னும் கொத்தலாமா என்றுகழுகுக் கண்களாற் பார்க்கிறான் கொண்டக்டர்.

வான் புறப்படுகிறது. கொண்டக்டர் மிதி பலகையில் தொத்திக் கொண்டு றைற் என்கிறான். பாம்-பாம் எனக்குரல் கொடுத்து கடகடத்த உதறலோடுஉறுமிக் கொண்டு வான் ஓடுகிறது.

வானின் வேகம் சற்றுத் தணிகிறது.

''எவடம்?''

''இருவாலை'' சொல்லியவராய் ஓடிவந்துமிதிபலகையிற் காலை வைத்து ஏறுகிறார் ஒரு குடுமிக்காரர்.

''இறங்கிறங்கு பின்னுக்கு வஸ் வருகுது.''

வான் மறுபடி கிளம்பிப் போய்க் கொண்டிருக்கிறது. மறுபடியும் ஒரு தங்கல்.

''என்ன மச்சான்?''- டிரைவர் வினவுகிறான்.

''சரி சரி எடு, வஸ் வருகுது போலக்கிடக்கு.''

டொமினிக்ஜீவாவின் 'மல்லிகை' சஞ்சிகையின் ஜனவரி இதழில் வெளியாகியிருந்த இந்தக்கதையை வாசித்துக் கொண்டு ஒருபழையவானில் உட்கார்ந்திருந்தேன். கதையை இதற்கு மேல் தொடர்ந்து படிக்கமுடியாதபடி வானில் ஏகப்பட்ட நெருக்கடியாகிவிட்டது.

''நான் வெளியிலை நிண்டு வாறன். அவசரமாகப்போக வேணும்''- ஒரு வாலிபரின் கடைசிநேரக்கெஞ்சுதல்.

''இஞ்சை நிற்கவும் இடமில்லை-றைற்'' - கொண்டக்டரின் கண்டிப்பு.

வான் போய்க்கொண்டிருக்கையில் வாயிலிருந்த சிகரட்டைகையில் விரலிடுக்குக்குள் செருகிக்கொண்டே டிரைவர் வானுக்குள்ளே தனக்குப்பின்னால் நசுங்கிக்

படி ஓட்டை உடைசலாகப் போய்விட்டாலும்அவற்றை நாளாந்தம் பழுது திருத்திச் செப்பனிட்டு அவற்றின் ஆயுளை நீடிப்பதில் யாழ்ப்பாணத்தவர் தனித்திறமை பெற்றவர்கள். இந்த வகையில் இன்று நம்மூர் தெருக்களிலே ஊரும் இந்த ஊர்க் குருவி வாகனங்களுக்குப்பின்னால் ஒரு நீண்ட வரலாறு- நெடுந்தூரக்கதையே உண்டு.

ஜேர்மனி நாட்டில் அவ்வூருக்கு ரயில் முதல்தடவையாக வந்த போது பொதி வண்டி வைத்து நாளாந்தம் அதை ஓட்டிப் பிழைத்த ஒரு கிழவி ஒருநாள் ரயில்மேல் ஆத்திரங் கொண்டவளாய் ரயிலோடு போட்டி போட்டு அடுத்த ஊருக்கு இரவிரவாய் கொட்டும்பனியில்தன் வண்டியை முழுமூச்சாக ஓட்டிச்சென்று எப்படியோ ரயிலுக்கு முந்திப்போய் சேர்ந்து அதன்பின் செத்துப் போனாளாம். எப்பொழுதோ வாசித்தஇந்தச்சிறுகதையும் என் ஞாபகத்துக்கு வந்தது. ஏன்-தூங்கு மூஞ்சி முயலுடன் போட்டியிட்டு ஆமை ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்ற கதை சிறு வயதில் பாலபாடத்தில் நாம்படித்த கதைதானே! போட்டி- ஆமாம் பழமைக்கும் புதுமைக்கும்தான். ஒருக்காலும் மாளாதபோட்டி இது.

'மல்லிகை' சஞ்சிகையின் இதே இதழிலே ஒரு கட்டுரை 'எப்படிஎழுதினேன்?' என்ற தலைப்பில் வெளியாகியிருக்கிறது.

என்னை எழுத்துத் தொழிலுக்குள் பகிரங்கமாக இழுத்துவிட்டசோ.சிவபாத சுந்தரமும் அவரை எழுத்துலகுக்குள் இழுத்துவிட்ட அமரர் கல்கியும் மற்றும்விபுலானந்த அடிகளும் வேறு பலரும் முதற் சந்திப்பின்போதே இன்னொருவரின் அறிமுகத்துக்கு இடம் வைக்காமல் 'ஓ, அவரைத் தெரியுமே'' என்று சொல்லிவிட்டார்கள். கல்கியோ நீண்ட காலம் பழகியவரைப்போல என் கதையைப்பற்றி அளவளாவி அந்நியோந்நிய உறவு பாராட்டினார். இது கட்டுரையில் ஒரு 'பாரா'. கதையைப்பற்றியா, கரத்தைப் பற்றியா?

## காலச் சக்கரம்

கதிரவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தாரையாக தண்ணீர். கால் வைத்த இடமெல்லாம்ஒரே ஈரக்கசிவு, ஊறிச்சுவறும் ஈரலிப்பு நினைப்பும் தோய்ப்பும் குளிரும் கூதலும். இரண்டுநாளாகஇப்படி ஊற்றுகிறது. அலுவலகம் வந்து சேர்ந்து ஓர் இரண்டு மணிக் காலத்தின்பின் இப்பொழுது தான் கருமேகத்திரையைக் கிழித்துக்கொண்டு பகலவன் வெளிவந்திருக்கிறான். உலகம் என்னஅழகாகத் தோன்றுகிறது. மரம்செடிகளெல் காட்சி-நாள் முழுக்கப் பார்த்து அநுபவிக்கக்கூடிய தொன்ன நீராட இறங்கினலோ இன்றும் நாளையும் கூட எழுந்திருக்க மனம் இசையாது. இப்படி அபூர்வமாகப் பாயும் மழைக்காளான் அருவிகளில் நீராடுவதற்கும் அவை பாடும் ஓசையைக் கேட்டுக் கொண்டே ஆண்டில் ஓரிரண்டுமாதம் அறிதுயில் கொள்வதற்குமாகசுற்றுவட்டாரத்தில் காணிவாங்கி

கேணி ஓடைக்குள்ளேயிருந்துதான் ஒரு குரல் எழுந்தது.

''ஆரது வேலனே, மெய்யாகத்தானே வேலன்? எப்ப நடந்தது?''

''ஓம் தம்பி, அது நடந்து இன்றைக்கு ஒரு மாசமாகுது.''

''சே, எத்தனை காலத்துச் சீவன்!''

மரமே ஆகிவிட்டேனே?

ஈரம் வற்றிப்போன தலை நனைய இரண்டுதரம் மறுபடியும் தண்ணீருக்குள்ளே முங்கி எழுந்து ''அப்ப நான் வரப்போகிறன் தம்பி'' என்றான் வேலன்.

நான் தலை அசைத்தேன், வேலன் போய் விட்டான்.

அவன் நின்று தலைமுழுகிய இடத்தில் அவன் வெளியேறிப் போனபின்னே தண்ணீர் சுழித்துப்பாய்கிறது. பளிங்கு

சற்று நேரத்துக்குள்ளாக மூன்றாவது மனிதர் மெல்ல நழுவி வெளியேறிவிட்டார்.

பெரியவரும் நானும் மட்டுமே கேணிக்குள் தனித்து நின்றோம்.

ஒன்றும் நடவாததைப் போல அந்தச் சாதுமனிதர் என்னை நோக்கியவராய் ''தம்பி இப்ப நேரம் என்ன இருக்கும்?'' என்று வினவினார்.

அதன்மேல் அந்தச் சாது மனிதர் ''அப்ப சரி தம்பி எனக்கு நேரமாகிறது. மடத்தில் வேறே ஆட்களும் காத்துக் கொண்டிருப்பினம். நான் இனியும் நிற்கக் கூடாது'' என்று சொல்லிக் கொண்டு எழுந்துவிட்டார்.

கடைசி ஆளும் எழுந்து போனபின் கேணிக்குள் தன்னந்தனியனாக தனிக்காட்டு ராசாவாக இரண்டு அந்தமும் ஒரே அந்தமாக நீச்சலடித்துக் கும்மாளம் கொட்டி எழுந்திருக்க மணி ஐந்து மட்டிலாகிவிட்டது. படிக்கட்டில் கால் வைத்த போது தேகம் கிடுகிடுவென குளிரினல் நடுங்கியது. தாமதிக்காமல் ஈரம் உலர்த்திக் கொண்டு கேணிப்பிள்ளையார் கோவிலிலே திருநீறும் சந்தனமும் தரித்து அதன் பின், பக்கத்துத்தேநீர்கடை

5-ம் பக்கம் பார்க்க]

கொண்டிருந்த ஒரு பிரயாணியிடம் சொல்கிறார்:

''மச்சான் என்ர வானல்லோ இரண்டு கிழமைக்கு முன்னால் அடியுண்டு போச்சு''

''மெய்தானே அதுதான் சில நாட்களாக உங்களைத் தெருவில் காணமுடியவில்லையாக்கும்''— பிரயாணியின் பதில்.

''விடுவோமா? எட்டிப் பார் வானை. எத்தனை ஒட்டும் பத்தும் போட்டுஇழைப் பிடிச்சிருக்கு.''

பிரயாணி எட்டிப்பார்த்து விட்டு வாய்க்குள்ளே சிரித்துக்கொள்கிறார். அவருக்குத் தெரியும் ஒருக்கால் எங்கே யாவது அந்த வான் போய் முட்டினலோ மோதினலோ அந்த இடத்திலே அது ஆயிரம் சுக்கலாகப் பிரிந்து கொட்டுண்டு போய்விடும் என்ற இரகசியம்.

## போட்டி

அதனல்என்ன? இதுமாதிரி வண்டில்கள் இ. போ. ச. வுடனே போட்டிபோட்டுக் கொண்டு எங்கள் இராச பாட்டையிலே புல்லோட்டாக அந்தரபவனியில் தினமும் பறந்தோடுவதைக் காணலாம். நாலு சக்கரங்களும் கழன்று ஓடிப்போய் விடாமல்ஒழுங்காகச்சுழலும் வரை இந்த லொட லொடா வாகனங்கள் தெருவோடு ஓட்டிக்கொண்டிருக்கும். எப்

## அ. செ. மு. வின் நினைவுத்துளிர்

கொழும்பிலே ஒரு தமிழ் தினசரிப்பத்திரிகையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். என்னேடு கூட எழுத்தாள நண்பர்களுக்கும் இலக்கியத் தோழர்களுக்கும் எப்பொழுதும் குறைவிருக்காதே. எஸ். டி. சிவநாயகம், கே. கணேஷ், அ. ந. கந்தசாமி. தாழையடி சபாரத்தினம், மட்டக்களப்பு இராசதுரை, ரீ.பாக்கியநாதன், இப்ராகிம்- இத்தனைபேர் சேர்ந்திருந்த பத்திரிகாலய சூழாமைத் தான் அந்நாளில் கொழும்பு வந்த 'கல்கி' ''என் நண்பர்கள்'' என்று சொல்லிக் கொண்டு ஒரு நாள் பார்க்க வந்தார்.

அந்நாளில் 'வாழ்க்கை' என்று ஒரு படம் கொழும்பில் முதன் முறையாக ஓடிக் கொண்டிருந்தது. படத்தின் கதை ஓர் எழுத்தாளனைப் பற்றியது. படம் ஓடிய தியேட்டரும் அலுவலகத்

[4-ம் பக்கம் பார்க்க]

கர்மம் செய்யாமல் எவனும் ஞானத்தை அடையமுடியாது.

—கீதாதபோதனையில் காந்தியடிகள்.

# நம்பிக்கை அளிக்கும் புதுக்குடியிருப்பு

## டாக்டர் பி. எஸ். சந்திரசேகரர்

**புதுக்குடியிருப்பு, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் பலவும் 'புதுக்குடியிருப்பு' என்றே அழைக்கப்படுகின்றன. சில இடங்களில் இப்பெயர் நிலைத்துவிடுகிறது. கற்பிட்டி, மட்டக்களப்பு, வவனியா ஆகிய இடங்களிலும் 'புதுக்குடியிருப்பு' இருக்கிறது. முல்லைத்தீவில் இருக்கும் புதுக்குடியிருப்புபற்றி இக்கட்டுரை விபரமாக ஆனல் சுவையுடன் எடுத்துக்கூறுகிறது.**

'புதுக்குடியிருப்பு' என்ற பெயருடன் கற்பிட்டியிலும், மட்டக்களப்பிலும், வவனியாவிலும் கிராமங்கள்உண்டு. ஆனல், இப்பொழுது நாம் அறியப்புகும் கிராமம் முல்லைத்தீவில் உள்ளது. பெயர் 'புதுக்குடியிருப்பு' என்பதால் முதல் முதலாக இக்கிராமத்தைப் பற்றிக் கேள்விப்படுவோர் ''இப்போதுள்ள குடியேற்றப்பகுதியில் இதுவும் ஒன்ரு?'' என்று கேட்பதுண்டு. ஆனல் இது மிகப் பழமையான கிராமமாகும். சீர் சிறப்பு மிக்க செல்வம் கொழிப்பதும், பேர்புகழ் கொண்ட பெருமைமிக்கதுமான கிராமம். கண்கொள்ளாக்காட்சியும், உளம் நிறைந்த வனப்பும்கொண்டது.

முல்லைத்தீவுப்பட்டணத்தின் வடதென்திசையில் இக்கிராமம் இருக்கிறது. புதுக்குடியிருப்பிலிருந்து ஆனந்தபுரம், இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால், வட்டுவாய்க்கால்ஊடாக முல்லைத்தீவுவரை பத்துமைல் தூரத்திற்கும் பாதை உண்டு. புதுக்குடியிருப்பிலிருந்து கேப்பாபுலவு ஊடாக வற்ருப்பளை செல்ல எட்டுமைல் தூரத்திற்கு ஒரு பாதையும் சுற்றிலைமடுவினூடாக ஒட்டுசுட்டான் செல்ல பன்னிரண்டு மைல் தூரத்திற்கு ஒரு பாதையும், தேவிபுரம், ஆனந்தபுரம் ஊடாக பரந்தனுக்குச் செல்ல இருபத்திரண்டு மைல் தூரத்திற்கு ஒரு பாதையும், இரணைப்பாலையினூடாக மாத்தளன், பொக்கணை, வலையன்மடம் செல்ல நான்கு மைல் தூரத்திற்கு ஒரு பாதையுமாக ஐந்துபாதைகள் இக்கிராமத்திற்கு உண்டு. இது போக்குவரத்திற்கு மிகமிக வசதிக்குறைவான கிராமம். இங்குள்ள பாதைகள் எல்லாம் மண்பாதைகள்தான். மழைகாலத்திலே நடந்து செல்லும்பொழுதுகூட ''மழைகாலம்வழுவழுக்கல் மிகப்பதனம் மக்காள்'' என்ற கவியை நினைவு கூரவேண்டிய சூழ்நிலை இங்குள்ள ஒவ்வொருவருக்கும்ஏற்படுகிறது. மாட்டுவண்டிமட்டுமே இப்பாதைகளாற் செல்லத்தகுதிஉடையது.

முல்லைத்தீவிலிருந்து இரணைப்பாலை - புதுக்குடியிருப்புக்கும் சிலவேளை தேவிபுரத்திற்கும் பஸ்போக்குவரத்து இருக்கிறது. ஆனல் இந்த பஸ் குறித்த நேரத்தில் ஓடும்என்பதை எதிர்பார்க்க முடியாது. சிலவேளை முன் பின்னே, அல்லது போய் வராமலோ - வந்துபோகாமலோ செத்து) விடக்கூடியது. கடகடத்தபாதையிலே வெடுவெடுத்த பிரயாணம். பள்ளத்திலே பஸ் இறங்கி மேட்டிலே ஏறும்பொழுது ஒவ்வொருவருக்கும் (தவருமல்) தமது ஆசனத்திலிருந்து குலுங்கி எழுந்திருந்து 'ரொக் அன்ட் ரோல்' நடனமாடி, ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து முத்தங் கொடுக்கவேண்டியிருக்கிறது. இது பஸ்ஸினதும் பாதையினதும் தவறேயொழிய பிரயாணிகள் தவறல்ல.

இங்குள்ளமுக்கியதொழில் கமச்செய்கையாகும். இது நெல்விளையும் பூமி. பாண்டியன், கயவேலி, கடல்வெளி, இறம்பை, உடையார்வெளி போன்றவைகளே இங்குள்ளோரின் வயல்களாகும். இவை கிராமத்திலிருந்து பல மைல் தூரத்திலிருக்கின்றன. கமச்செய்கையில் இங்குள்ளோர் கெட்டிக்காரர். ஆண்களேயன்றிப் பெண்களும் கமம்செய்கின்றனர். இங்கு அதிகமாக, காலபோகமே செய்யப்படுகிறது. சிறுபோகம் செய்வதற்கு நீர் வசதியான இடங்களில் மட்டும் வாய்ப்பாக வயல் உள்ளோர் செய்கை பண்ணுகின்றனர். புரட்டாதி மாதத்திற் காலமழை பெய்யத்தொடங்கிவிடுவதால் ஆடி, ஆவணி மாதங்களில் வயல்களைப் பண்படுத்தி, புரட்டாதி மாதத்திற் பயிராகும்படி நெல்லை விதைப்பர். நெல் விதைத்தல், சூடடித்தல் போன்ற எல்லாம் இயந்திரமூலமே செய்யப்படுகிறது. மாசி, பங்குனி மாதங்களில் நெல் அறுவடையாகிவிடுகிறது. கமத்தொழிலைவிட, கரைத்தொழிலிலும் ஒரு சிலர் ஈடுபட்டாலும் இதை இங்குமுக்கியமாகச்சொல்லமுடியாது. கடல் தூரத்திலிருப்பதே இதற்குக்காரணம்.

## பனையும் பழமரங்களும்

இக்கிராமம்மத்தியதரைக் கடற்சுவாத்தியத்தைப்பெற்றிருப்பதால் வாழை, பலா, மா, தோடை, எலுமிச்சை போன்ற பழமரங்களும், பனையும் நன்ருகப்பயிராகின்றன. கிராம மக்கள் தங்கள் பிரயாசையால் மிளகாய், மரவள்ளி, கத்தரி, வெண்காயம், கொச்சி, வற்ருளை முதலியவற்றைத் தகுதிக்கேற்ப செய்கைபண்ணுகின்றனர். கடற்கரை இங்கிருந்து நாலுமைல் தூரத்தில் இருப்பதாலும், உவர்மண் தென்னைச்செய்கைக்கு வாய்ப்பானதாலும், தற்போது அரசினர் தென்னைச் செய்கைக்குரிய குடியேற்றத்திட்டத்தை ஆனந்தபுரம், இரணைப்பாலை, தேவிபுரம், தருமபுரம் முதலிய இடங்களில்அமுல்நடத்துகின்றனர். இங்குள்ளவர்களுக்கு மட்டுமல்ல வசதியானஎல்லோருக்குமே இப்பகுதிகளில் குடியேறும் வாய்ப்பைக் கொடுக்கின்றனர். செம்மண், இருவாட்டி, கரும்புழுதி போன்ற சத்துள்ள மண் மிக வாய்ப்பாய் இருந்தாலும் தண்ணீர்க் கஷ்டம் செல்வச்செழிப்புக்குச்சிறிது தடங்கலாகும்.

இங்கு மூன்று பாடசாலைகள் உண்டு. ஒன்று மகா வித்தியாலயம். இங்கே கிட்டத்தத்தட்ட ஆண் பெண் உட்பட ஐந்நூறு பிள்ளைகள் படிக்கிருர்கள். ஏச். எஸ். சி. வரை வகுப்புகள் உண்டு. பதின்மூன்று ஆசிரியர்களும் ஐந்து ஆசிரியைகளும் கல்வி போதிக்கின்றனர். மற்றென்றுசிரேஷ்டபாடசாலை. இங்கு ஆண்களும் பெண்களுமாக இருநூறுபிள்ளைகளும், நான்கு ஆசிரியைகளும் இரண்டு ஆசிரியர்களும் உளர். இன்னென்று ஆரம்ப பாடசாலை. இதில் நூற்றைம்பது பிள்ளைகளும் இரண்டு ஆசிரியர்களும், இரண்டு ஆசிரியைகளும் உளர். இங்கு இரண்டாம் வகுப்புவரை கல்வி போதிக்கப்படுகிறது. பாடசாலைகள் கல்வி அபிவிருத்தியில் ஒன்றையொன்று விட்டுக்கொடாமல் பாடுபடுகின்றன. பரீட்சை முடிவுகளில் இக்கிராமம் முதலிடம்பெறுகிறது. படித்தவர்கள், ஆசிரியர், டாக்டர், கிளார்க் போன்ற தொழில்களில் ஈடுபட்டு உழைக்கின்றனர். இங்குள்ள வியாபாரிகள் வியாபாரத்திற்குப் புதிதாக இருந்தாலும், பெரிய நிபுணரைப்போல் திறமைசாலிகளாகத்திகழ்கின்றனர்.

இங்குள்ள மக்கள் தெய்வ விசுவாசம் மிக்கவர்கள். தான தர்மங்களும் தயாள சிந்தையும் உள்ளவர்கள். பிறருக்குத் தங்களால் இயன்ற உதவி எதையும் செய்வர். பிறர் பொருளை இச்சிக்கமாட்டார்கள். ஆனல் பிறர் ஏமாற்றத்திற்கு எடுபடவோ, மிரட்டல், விரட்டல்களுக்கு விட்டுக் கொடுக்கவோமாட்டார்கள்.

இங்கு கோவில்கள் பல உண்டு. கோவில்களில் அதிகமாக மூன்றுகாலப்பூசையே நடத்தப்படுகிறது. ஆடி, ஆவணி மாதங்களில் கந்தசுவாமி கோவில், பிள்ளையார் கோவில் முதலியவற்றில் வெகுவிமரிசையாகத் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. சித்திரைப்பௌர்ணமியில் அம்மன்கோவிலிற் பொங்கலும், சூசையப்பர் கோவிலிற்கொடியேற்றமும் நடக்கிறது. இதைவிட, ஐயன்கோவிலில் மக்கள் நேர்த்திக்கடன்களைச்செய்து மடைபோடுகின்றனர்.

கிராமச்சபையார் ஆங்காங்கு கிணறுகள் கட்டியுள்ளனர். அருங்கோடை காலத்தில் கிணறுகள் வற்றிவிடத்தண்ணீர்ப்பஞ்சம் ஏற்படுகிறது. இங்கு கிராமசபைப்பொறுப்பில் சந்தை ஒன்றுண்டு. இதுகாலை எட்டு மணிதொடக்கம்மாலை ஆறு மணிவரைகூடுகிறது. இதிலே மரக்கறியையும், மீனையும் மலிவாக வாங்கலாம். இங்குள்ளோர்க்கு ஒன்ருலும் குறைவில்லை. ஆனல் ஒருகுறைமட்டும் சாபக்கேடாயுள்ளது. இதுதான் கள்ளுத்தவறணையின்கேடு.

## தானியக் களஞ்சியமாகலாம்

உழைப்பு முழுவதையும் இதிலே கரைத்துவிட்டு ஓடெடுக்கும் நிலைக்கு வந்தும்கூட சிலர் குடியைமறக்கமுடியாது அவதியுறுகின்றனர். சுருங்கச்சொன்னல் கருப்பநீர்ச் சீனிச்சாலை ஒன்றுதொடங்கினல்அரசினருக்கும்மக்களுக்கும் பெரிய ஆதாயம் கிடைப்பதோடு புதுக்குடியிருப்புக் கிராமம் விரைவில் பெரிய பட்டணமாகி, இலங்கைமுழுவதுமே நம்பியிருக்ககூடியமாபெரும் தானியக்களஞ்சியமாவதோடுவற்ருத செல்வத்தின் நீரூற்றேயாகி விடுமென்பது கடவுளின் வாக்கியமாகக் கொள்ளக்கூடியதொன்ருகும்.

# புதுக்குடியிருப்பு

''லேடன்''
LEYDEN
தயாரிப்புக்கள்
பெனியன்
ஸ்போட் சேட்
ரி சேட்
ரெறி சேட்
ரெறி பிளவுஸ்
பேபி வெஸ்ட்
கால் மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடிகவேள் ராதாவின் நிறைவேறாத ஆசை!



## தேவிகா காதல்!

ஆயிரக்கணக்கான ரஸிகர்களின் இதயங்களைக் கொள்ளையடித்த கவர்ச்சி நடிகை தேவிகா ஒருவருக்குச் சொந்தமாகப்போகிறார். தான் திருமணம் செய்துகொள்ளப்போபவரை மாப்பிள்ளை பார்த்துவிட்டாராம் தேவிகா!


டைரக்டர் ஒருவரைத் தேவிகா காதலிப்பதாகவும், அவரையே திருமணம் செய்துகொள்வாரென்றும் ஒருவருடகாலத்துக்குமுன் இதே பக்கத்தில் முதல்முதலாகச் செய்தி தந்திருந்தோம். அது இப்போது அம்பலத்துக்கு வரத்தொடங்கிவிட்டதே!



யாழ். திறந்த வெளியரங்கில் சென்ற 24-4-67 போயாதினக் கலை நிகழ்ச்சியின்போது மேடையேற்றப்பட்ட சேக்ஸ்பியரின் 'ஒதெல்லோ' நாடகத்தில் உள்ளத்தை உருக்கும் கட்டம்தான் இது. தன் மனைவி டெஸ்ரிமோனாமீது வீணைச் சந்தேகப்பட்டு அவளையே கொலை செய்துவிடுகிறான் ஒதெல்லோ! அந்தக் கட்டத்தில் ஒதெல்லோவாக நடித்த ஓவியர் பத்மாவின் நடிப்புக்கு ஒரு 'சபாஷ்' போடலாமே!

—மே

## பெண்களை தெய்வமாக மதிப்பவர் எம். ஜி. ஆர்!



ஜெயலலிதா கூறுகிறார்

மக்கள்திலகம் எம். ஜி. ஆரைப்பற்றி கவர்ச்சிக் கன்னி ஜெயலலிதாவிடம் சில கேள்விகள் கேட்ட போது அவர் இப்படியாகப் பதில் சொன்னார்.

கே: எம். ஜி. ஆர். குறித்து தங்கள்கருத்தென்ன?

ப: ஒரு நல்ல நடிகர் மட்டுமல்ல; பெண்களைத் தெய்வமாக மதித்து நடக்கக்கூடியவர்.

கே: நீங்கள் முதல் முதலாக எம். ஜி. ஆரை எப்போது பார்த்தீர்கள்? அப்போது என்ன நினைத்தீர்கள்?

ப: என் தாயார் நடிக்கும்போதே, அவரை நான் என் குழந்தைப் பருவத்தில் இருந்தே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

கே: மக்கள் திலகம் — நடிகர் திலகம் இவர்களுக்கு இடையில் உள்ள வேறுபாடு என்ன?

ப: அவரும் ஒரு சிறந்த நடிகர்; இவரும் ஒரு சிறந்த நடிகர். அவரவர்களுக்குள்ள வேறுபாடு அவரவர் நடிக்கும் பாணியே.

கே: எம். ஜி. ஆரை யாருக்கு ஒப்பிடுகிறீர்கள்?

ப: அவருக்கு அவரேதான் இணை.

## கலை அரங்கம்

நடிகர் எம். ஆர். ராதாவிற்கு நீண்ட நாளாக ஒரு ஆசை இருந்து வந்தது. அந்த ஆசை இதுவரை நிறைவேறவில்லை. இனிமேல் நிறைவேறுமா என்பதும் நிச்சயமாகக் கூறமுடியாது. சொந்தத்தில் ஒரு படமெடுக்கவேண்டும் என்றும் முக்கிய பாகத்தில் தானே நடிக்கவேண்டுமென்றும் விரும்பினார். ரத்தக்கண்ணீர் மூலம் சினிமா உலகில் ஒளிவீசத் தொடங்கிய ராதா, எம். ஆர். புரொடக்ஷன் என்ற படக்கம்பெனியை ஆரம்பித்தார். படக்கதையை எழுதும்படி ஏ. பி. நாகராஜனைக் கேட்டுக்கொண்டார். படத்திற்கும் 'ஆளப்பிறந்தவன்' என்ற பெயரைச் சூட்டினார். 57-ம் ஆண்டு, இப்படத்திற்கான ஆரம்பவேலைகள் நடைபெற்றுக் கொண்டுவந்தன. அச்சமயத்தில், திரையுலகில் எம். ஜி. ராமச்சந்திரன் முன்னணி நட்சத்திரமாக விளங்கிக் கொண்டு வந்தார். எம். ஜி. ஆரை கதாநாயகனாகப்போட்டு, படத்தை தயாரிக்கும்படி சிலர் செய்த சிபார்சையும், எம். ஆர். ராதா நிராகரித்து விட்டாராம். ஆனால் பின்னர் பல படங்களில் எம். ஜி. ஆருடன் சேர்ந்து நடித்ததிலிருந்து எம். ஜி. ஆரின் சிறந்த பண்புகளை நேரில் அறிந்து கொண்டார். அதனால், ராதாவிற்கு எம். ஜி. ஆர். மீது அன்பும், நம்பிக்கையும் ஏற்பட்டது. ஒரு முறை எம். ஜி. ஆரை 'ஒரிஜினல் நடிகர்' என்று கூட பாராட்டியிருக்கிறார்.

ராதா சொந்தத்தில் தயாரிக்கத் திட்டமிட்ட ஆளப்பிறந்தவன் படம் கருவிலேயே அழிந்துவிட்டது. இந்த நேரத்தில் தான் ''பெற்றால்தான் பிள்ளையா?'' தயாரிப்பாளர்வாசு, படத்தைத்தயாரிக்கப் பணமில்லாமல், எம். ஜி. ஆர். உதவியை நாடினாராம். எம். ஜி. ஆர். நடிகர் ராதாவிடம் இது பற்றித் தெரிவித்தபோது அவர்சம்மதித்ததாகவும், படத்தை 'எம். ஆர்.' புரொடக்ஷன்ஸ் என்றோ அல்லது 'எம். ஆர். ஆர். அளிக்கும்' என்றோபோட வேண்டுமென்று நடிகர் ராதா கேட்டுக் கொண்டாராம். வாசுவும் அதற்குச் சம்மதித்தார். ஆனால் படம் திரையிடப்பட்ட போது ராதா ஏமாற்றமடைந்தாராம். காரணம், 'எம். ஆர். ஆர். அளிக்கும்' என்றுபோடப் படாததுதான்!

''யோகி''

தொடர் கட்டுரை

## வாஹினியில் நான்!

— எஸ். அருமைநாயகம்.

படப்பிடிப்பு விஷயத்தில் முக்கிய ஸ்தானம் வகிப்பது 'லென்ஸ்' என்று சொல்லப்படும் 'காமிரா'வின் முன் பொருத்தப்பட்ட கண்ணாடிகளே! ஒரு மனிதனின் கண்போன்று இவைகள் செயல்படுகின்றன.

ஒரு சினிமாப்படக் 'காமிரா'வுக்கு சாதாரண காமிரவைப் போலல்லாது பலதரப்பட்ட லென்சுகள்வேண்டும். அவற்றை முறையே 100 எம். எம்., 75 எம். எம்., 50 எம். எம்., 25 எம். எம். என்று சொல்வார்கள். 'அகலக்கோண லென்ஸ்', 'தூரப்படலென்ஸ்' என்னும் புதுவகை லென்சுகள் இன்று பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர வடிகட்டிகள் என்னும் லென்சுகள் மற்ற லென்சுகளோடுசேர்த்துப் பயன்படுத்தப்படும் பொழுதுவேண்டியவிளைவுகளைப்பெறமுடிகிறது.

ஒரு மனிதனின் கண்களுக்கு அழகாகத்தெரியும் ஒருவர் காமிராவின் கண்களாகிய லென்சுகளுக்கு அழகில்லாதவராகக் காணப்படலாம். அதே போன்று மனிதனின் கண்களுக்கு அழகில்லாதவராகக் காணப்படும் ஒருவர் காமிராவின் லென்சுகளுக்கு அழகுநிரம்பியவராகக் காணப்படலாம். நாம் ஒருவரைச் சாதாரணமாகப் பார்க்கும்பொழுது அவருடைய நிறம், தோலின் மென்மை, கண்களின் கவர்ச்சி, கேசத்தின் அழகு இவைகளெல்லாம் சேர்ந்து அவரை அழகுள்ளவராகத் தோற்றுவிக்கின்றன.

ஆனால் 'காமிரா' லென்ஸ் ஒருவரைப் படம் பிடிக்கும்போது அவருடைய நிறம், மென்மை, வசீகரம் இவைகளையெல்லாம் விட்டுவிட்டு அவருடைய முகத்தின் அகலம், நீளம், உயரம், கு[illegible]

படமெடுக்கும்பொழுது தூரக்காட்சி மதியகாட்சி அண்மைக்காட்சி என்னும் பிரிவுகளைக்கையாண்டு எடுப்பார்கள். ஒவ்வொரு காட்சிக்கும் தகுந்தபடி காமிராவுக்கும், நடிகருக்கும் உள்ளதூரம் வித்தியாசப்படும். காமிரா நடிகருக்குக்கிட்டவோ, அல்லது தூரமாகவோ அரக்கப்படவேண்டும்.

அப்படியில்லாமல் நடிகரும் காமிராவும் ஒரே இடத்திலிருக்கக் கூடியதாக லென்சுகளை மாற்றுவதன்மூலமும் தூர வித்தி

### மாயக் கண்ணாடி இந்த லென்ஸ்

யாசத்தை அடையலாம். 100 எம். எம். லென்சைப் பொருத்துவதன்மூலம் 'கிளோஸ் அப்' என்னும் சமீபக் காட்சியைப் பெறலாம். திரையில் முகம் மட்டுமேகாட்சியளிக்கும். 18 எம். எம். என்னும் லென்சைப் பொருத்துவதின் மூலம் தூரக்காட்சியை அதாவது நடிகரின் முழு உருவத்தையும்பெறலாம்.

மிகவும் நெருக்கடியான இடங்களிலும் தெருக்களிலும் படம்பிடிக்கும் போது அகலக்கோண லென்சைப் பொருத்திப்

## நம் நாட்டு கலைஞர்



கள் வானொலிப் பெட்டியை விட்டு அகன்றே போயிருக்கமாட்டார்கள்!

### பிறக்கும்போதே...

பிறக்கும்போதே செல்வி இந்திராவுடன் இனிக்கும் குரல் கூடவே பிறந்துவிட்[illegible]தென்றே பெயர் இவருக்குச் சூட்டப்பட்டது.

சின்ன வயதில், சினிமாப் பாட்டுக்களை மனனம் செய்து, அழகாக இவர் பாடுவதுகண்ட பெற்றோர்; இவரைப் பாட்டு வாத்தியாரிடம் அனுப்பினார்கள். சங்கீத பூஷணம் விநாசித்தம்பியிடம் ஆரம்ப இசை பயின்ற இவர், பின்னர் இசைப் புலவர் சண்முகரத்தினத்திடமும், சங்கீதமும் படித்த இந்திரா, இப்போது முழுநேரத்தையும் இசைத்துறைக்கே தன்னை அர்ப்பணித்திருக்கிறார். அடுத்த மாத அளவில் சென்னை சென்று, 'மெட்ராஸ் கர்நாடக சங்கீத அரசாங்க கல்லூரி'யில் நான்கு வருடப் படிப்பொன்றை இந்திரா மேற்கொள்ளவிருக்கிறார்.

கர்நாடக இசை[illegible] மாப்பாட்டு (''டப்பா'') பாடிப்பாடி இசைத் தெய்வத்துக்கு சேவை செய்துகொண்டேயிருக்க வேண்டும். இதுதான் என் ஒரே லட்சியம்'' என்று அடக்கமாக அடிக்கடி சொல்லிக்கொள்வார், இந்த 'இசைச் செல்வி' இந்திரா.

நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா ஒரு முறை இவர் கச்சேரி[illegible]டுவிட்டு, [illegible] வைத்திருக்கும் அவரின் எதிர்காலம் சிறப்பாக அமை

## காலச்சக்கரம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

துக்கு மிக சமீபத்தில்தானிருந்தது. எங்கள் பத்திரிகாலய கோஷ்டியில் இளைஞர்களாயிருந்தவர்கள் சேர்ந்தும் தனித்தும் தெரிந்தும் தெரியாமலும் எத்தனை [illegible]வை இந்தப் படத்தைச் சென்று பார்த்தார்கள் தெரியுமா? படத்தைப் பார்த்துவிட்டுவந்து எழுத்துலகம்பற்றி நவமான கன[illegible] கண்டுகொண்டு சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசைச் செல்வி

இனிமையான அந்த நாட்டுப்பாடல் இலங்கை வானொலியில் இசைத்துக் கொண்டிருந்தது! இனிக்க, இனிக்கப் பாடிக் கொண்டிருந்த அவர் யாரென்று தெரியாதிருந்தபோதிலும், குரலிலே இருந்த குழைவும், சுவையும் கேட்பவர்கள் மனதையெல்லாம் கவர்ந்தேவிட்டது. நிச்சயமாக அந்த நாட்டுப் பாடல்களையெல்லாம் பாடியவர் யார் என்ற விபரத்தைத் தெரிந்து கொள்ளாமல், ரஸிகர்

பிறக்கும்போதே இனிக்கும் குரல் கூடவே பிறந்துவிட்டதென்றே சொல்[illegible] பாட்டிசைத்த இடங்களிலெல்லாம், 'சபாஷ்', 'சபாஷ்' என்ற பாராட்டுதல்களைப் பெறத் தவருத இவரின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று சொல்லவே வேண்டியதில்லை!

இருபது தடவைக்கு மேல் இலங்கை வானொலியில் பாடி, இருபத்தைந்து பொதுக் கச்சேரிகள் செய்துவிட்ட இவர் 1948-ம் ஆண்டு கார்த்திகை பூரணை தினத்தன்று சரசாலைகணபதிப்பிள்ளை-தேவரத்தினம் தம்பதிகளுக்குப் புத்திரியாகப் பிறந்தார். இந்திரா தேவி என்ற இனிய

பூயின்ற, இவர். பின்னர் [illegible] ரத்தினத்திடமும், சங்கீத மாப்பாட்டு ('டப்பா') பூஷணம் வி. கே. நடராஜனிடமும் ஓரளவு இசைத்துறையில் பயிற்சி பெற்ருர்.

## 'பஸ்ட்'

பள்ளியில் நடாத்தப்படும் சகல இசைப்போட்டிகளிலும் இந்திராதான் 'பஸ்ட்!' அத்துடன்மட்டுமா, தொகுதிவாரியாக நடாத்தப்பட்ட இசைப் போட்டிகளிலும் முதல் பரிசு இவருக்குத்தான்!!

சரசாலை சரஸ்வதி வித்தியாசாலையிலும், பின்னர் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியி

இரண்டுமே போகக்கூடிய இவர் யாராவது வற்புறுத்திஞல்மட்டும்,'சினிமாப் பாட்டைப் பாடுகிருர். மாதத்துக்கு ஒரு தடவையாவது இலங்கை வானொலியிலிருந்து இவருக்கு அழைப்புவருகிறது.

## ஒரே லட்சியம்

''தேவாரம், திருவாசகம், பக்திக் கீர்த்தனைகள்

'இனிய குரலை வைத்திருக்கும் அவரின் எதிர்காலம் சிறப்பாக அமையும்' என்று பாராட்டியதை இந்திரா இன்னமும் மறக்காமல் நினைவில் வைத்திருக்கிருர்.

இசைத்தெய்வத்துக்குப் பணி செய்வதற்கென்றே பிறந்துவிட்ட இந்த 'இசைச் செல்வி'யின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும் என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை!

—பாமா ராஜகோபால்—

---

பார்த்துவிட்டுவந்து எழுத்துலகம்பற்றி நவமான கன[illegible] கண்டுகொண்டு சில நாள் ஏதோ கிறுக்குப் பிடித்ததுபோலாஞர்கள். புதிய உத்வேகத்துடனே எழுதவும் தொடங்கிஞர்கள். படம் பார்க்காவிட்டாலும் அந்தப் படம் ஓடுகிற அத்தனை நாளும் சும்மா ஒருக்கால் தியேட்டர் போய் விட்டுத்தான் வருவார்கள்.

கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று உலகச் சிறுகதைப் போட்டிபற்றி அறிவித்தது. இந்த எழுத்தாளர் கோஷ்டியில் பலர் அடுத்தவருக்குத் தெரியாமல் இரகசியமாகவே கதைகள் எழுதி அனுப்பிஞர்கள். ஒரு நாள், பட்டப்பகலில் கதைகள் முழுக்கவும் அவரவர் விலாசத்துக்குத் திரும்பிவந்து சேர்ந்தன. ஒருவரையொருவர் கடைக்கண்ணுல் நோட்டம் விட்டுக்கொண்டே திரும்பி வந்த தபால் உறையைப் பிரித்துக்கூடப் பார்க்காமல் மேசை டிராயரை இழுத்து அதற்குள் போட்டுவிட்டு குனிந்த தலை நிமிராமல் தொடர்ந்து தத்தம் வேலைகளைக் கவனிக்கலாஞர்கள். வேலை முடிந்தபின் ஓய்வாக இருந்தபோது மேசை டிராயர்கள் மெதுவாகத் திறக்கப்பட்டன.

ஐயா,

தங்கள் சிறுகதையை நன்றியுடன் திருப்பி அனுப்பியிருக்கிருேம். உலகச் சிறுகதைப் போட்டியில் தெரிவு பெற்ற எல்லா உலக மொழிச் சிறுகதைகளினதும் மொழிபெயர்ப்பு காலக்கிரமத்தில் எங்கள் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும். அக்கதைகளை நீங்கள் அவசியம் படித்துப் பார்க்க வேண்டும். ஆறு மாதச் சந்தா முற்பணமாகச் செலுத்திவிடுங்கள். வணக்கம்.

இந்த குறிப்பை வாசித்தபோது எழுத்தாளர் ஒவ்வொருவர் முகத்திலும் மலர்ந்த சிரிப்பையும் - அந்தச் சிரிப்பின் பொருளையும் இன்றைக்கும் என்ஞல் நினைத்துப்பார்க்கமுடிகிறது.

அந்தப் பத்திரிகையின் விஷமத்தனம் என்றும் இதைச் சொல்ல முடியாது. இலங்கையிலிருந்து தமிழ் கதைகளைப் போட்டிக்கு எடுப்பதில்லை என்பது போட்டி அறிவிப்புக்கு முன்னமே முடிவாகியிருந்தது. தமிழ் நாட்டுக்கே அதை முழுக்கவும் விட்டுவிட்டார்கள். அதுதான் உண்மையில் நடந்தது, மற்றதெல்லாம் புருடா.

-ஒரு கடிதத்திலிருந்து


---

லாம் விட்டுவிட்டு அவருடைய முகத்தின் அகலம், நீளம், உயரம், குழி[illegible] ஆகியவற்றையே பதிய வைக்கின்றது. ஒரு கமிராவுக்கேற்ற முகத்தை 'போட்டோஜெனிக்' முகம் என்று அழைப்பார்கள்.

[illegible] போது அகலக்கோண லென்சைப் பொருத்திப் படம்பிடிப்பார்கள். மிகச் சிறிய அறைகூட விலாசமான இடமாகத்தெரியும்.

(இன்னும் வரும்)


சாளி! நான் கேட்டது இதுவல்ல! ஜின் என்று சொல்லும்போது நான் கேட்பது—



## மெஸ்தியா ஜின்னையே

ஏனென்ருல் ......??

1. புதிய மெஸ்தியா ஜின் இரு முறை வடிக்கப்பட்டது.
2. புதிய மெஸ்தியா ஜின் வெற்றி கண்டதோர் விசேஷ வெளிநாட்டு முறைப்படி தயாரிக்கப்படுவது.
3. புதிய மெஸ்தியா ஜின் மிகப் புதுமையான பிரெஞ்சு யந்திரங்களால் செய்யப்படுவது.
4. புதிய மெஸ்தியா ஜின்கள் [கலப்பற்றதும், தோடம்பழ ரஸம் கலந்ததும்] மென்மையானவை — வெண்பட்டும் மஞ்சள் ஊதாவும் — ஆ! அதுதான்!
5. புதிய மெஸ்தியா ஜின்தான் 'கொக்டெயில்' பானத்துக்கு சிறந்த அஸ்திவாரம். அதுமட்டுமல்ல, சாளி! நீ நினைக்கமுடியாத 'கொக்டெயில்' எல்லாவற்றையும் அது உருவாக்கும்.
6. புதிய மெஸ்தியா ஜின் ரொம்ப ரொம்ப சுத்தமானது—வெறி அம்மல் என்பதே கிடையாது. ஆனபடியால்தான், மேனை சாளி, நான் ஜின் என்று சொல்லும் போது

## புதிய மெஸ்தியா ஜின்னையே குறிப்பிடுகிறேன்

இங்கே காணப்படும் நமது நண்பர் உண்மையிலேயே ரசித்து மதுவை அருந்துபவர். புதிய மெஸ்தியா ஜின்னை தாம் விரும்புவதற்கு ஆறு காரணங்கள் கூறியிருக்கிருர். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:— புதிய மெஸ்தியா ஜின்னை நீங்கள் விரும்புவதற்கு உங்களுடைய சொந்த காரணம் என்னவென்பதை எழுதி புதிய மெஸ்தியா ஜின் போத்தல் லேபல் ஒன்றுடன் **புதிய மெஸ்தியா போட்டி** மே/பா. விஷன் விளம்பரங்கள் லிமிடெட், 3-வது மாடி, மாக்கான் மரைக் காயர் கட்டிடம், கொழும்பு—1 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.


எத்தனை சீட்டுகளாவது அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு சீட்டோடும் ஒருபுதிய மெஸ்தியா ஜின் லேபல் சேர்க்கப் படவேண்டும். **பன்னிரண்டு பரிசுகள்** கொடுக்கப்படும். **முதலாவது பரிசு சிங்கப்பூருக்குப் போய்வர ஓர் இலவச விமானடிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. மிகக் கூடுதலான சீட்டுகள் அனுப்புபவருக்கு சென்னைக்குப் போய்வர ஓர் இலவச விமான டிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு.** ஒரு விசேஷ நீதிபதி குழுவின் தீர்ப்பே முடிவானது. ஸ்ரீலங்கா டிஸ்ரிலறீஸ் லிமிடெட், விஷன் விளம்பரங்கள் லிமிடெட் ஆகிய ஸ்தாபனங்களில் வேலை செய்வோரும் அவர்களுடைய குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாகாது. போட்டிமுடிவு திகதி மே 31, 1967.

## சிங்கப்பூருக்கும் சென்னைக்கும்

### மெஸ்தியாவுடன் பறந்து செல்லுங்கள்

**10 ஆறுதல் பரிசுகள் உண்டு!**




சென்ற் அந்தோனிஸ் குறுப்

516, ஸ்கினேஸ் வீதி தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன்: 4261, 4261.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை (3ம் பக்கத் தொடர்ச்சி)

யில் சுடச்சுடத் தேநீர் வாங்கி அருந்தி இரண்டு மசாலவடையும் சாப்பிட்டு விட்டுத் திரும்பவும் கேணிக் கரைக்கே சுற்றிவந்து அங்கு பூவரசு மரங்களின் கீழ் போட்டிருந்த ஒரு பெஞ்சில் அமர்ந்து புகையும் வெற்றிலை பாக்குமாகச் சற்று வேளை ஓய்வெடுத்தேன்.

மழைக்காலத்து கடல் கொந்தளித்து பொங்கி எழுந்து அலைமோதிக்கொண்டிருக்கிறது.

''என்ன இன்னும் நீர் போகவில்லையா?'' - கேணியில் அறிமுகமான அதே சாது மனிதர்தான் இவ்வாறு வினவியவராய் புகைச் சுருட்டும் கையுமாக என்னருகே வந்து அமர்ந்தார்.

''இல்லை, பெரியவர். இப்பதான் கேணிக்குள்ளிருந்து எழுந்துவர மனம் இசைந்தது'' என்றேன்- வாய்க்குள் ஒரு மெல்லிய சிரிப்புடன்.

''இன்னும்ம தியபோசனம் கூட ஆகவில்லைப்போலிருக்கிறது. சேசே இந்த வயதில் இப்படியெல்லாம் வயிற்றைக் காயப்போடக் கூடாது. உமக்கு இப்ப என்ன வயதிருக்கும்-முப்பதைத் தாண்டியிருக்குமா? இன்னமும் தனியாள்தானே இல்லை...''

''அப்படித்தான்-நான் இன்னமும் தனியாள்தான் பெரியவர். இப்ப பறந்திடுவன் வீட்டுக்கு. அ...நீங்கள் உங்கள் வெளியூர் சீவியம் பற்றிச் சொல்லத்தொடங்கி விட்டு பாதியிலே எழுந்து போய்விட்டீர்களே பெரியவர். ஐயக்கோன் பஸ் கம்பெனியை விட்டு விலகினீர்கள். அதன்பின்-?'' —கதை கேட்க நல்ல 'மூட்' ஆக இருந்ததால் இப்படி அவர் விட்டகுறையை மூட்டினேன். அவரும் பாதியில் அணைந்து போன சுருட்டை நெருப்புக்குச்சிகிழித்து மூட்டிக்கொண்டே என்னை ஒருக்கால் ஏற இறங்கப் பார்த்து விட்டுப்பேசலானார்.

''நான் ஐயக்கோன் பஸ் கம்பெனியை விட்டு விலகியதே ஒரு கதை. அதற்கெல்லாம் நிமித்த கர்த்தாவாக இருந்தவள் - கேணிக்கரையில் அப்போது பார்த்தீரே அவளுடைய தாய்தான். அவவுடைய அஸ்திதான் என்னைத் திரும்பவும் ஊர் கொண்டு வந்து சேர்த்தது. இன்றைக்கு ஒரு மாதம் முப்பது முப்பத்திரண்டு நாள் ஆகுது எங்கள் முப்பதுஆண்டுக் கதை முடிந்தது. இதே நீரூற்றில் நீராடிவிட்டுநின்ற இறங்கியபோது ''உடுத்த கோடி எல்லாம் மழையிலே நனைஞ்சு போச்சே'' என்று சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். சிறிய தாய்க்காரி அவளை ஒரு செல்லப் பார்வை பார்த்து கீழே இறங்குவதற்கு அன்பாகக் கை கொடுத்தாள். பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயசுதானிருக்கும். சிறு பெண்ணுகவிருந்தாலும் திருநீற்றுப் பூச்சும் சந்தனப் பொட்டும் முழுகிய தலையுமாக புதுப்பாவாடை சட்டையில் நிறை கவர்ச்சியுடனே பொலிந்தாள். அந்த வயதில் அத்தனை கவர்ச்சி அபூர்வமாயிருந்தது எனக்கு

''ஆச்சி எங்கேயிருந்தனை வருகிறீர்கள்?''- தெரிந்து கொள்ளவேண்டும் போலிருந்தது. அதனுல் கேட்டேன்.

''நாங்கள் கிட்டத்தான் சித்திரமேழி'' என்று பதில் கிடைத்தது.

''மழையில் நனையாமல் மெதுவாக ஓடிப்போங்களனை கோவிலுக்கு'' என்றேன். பஸ் உறுமியது.

''உறுமிய பஸ்ஸையும் என்னையும் திரும்பிப்பார்த்து ''மெதுவாக ஓடிப் போகட்டாம்'' என்று சிறிய தாய்க்காரியிடம் சொல்லி இரண்டுபேருமாகச் சிரித்துக் கலகலத்தவர்களாகக் கூட்டத்தோடு கலந்து ஓடி மறைந்தார்கள்.

''சித்திரமேழி'' என்று என் வாய்-அல்ல என்மனம், ஒருக்கால் தனக்குள்ளாகச் சொல்லிக்கொள்ள, பஸ் சந்தியில் திரும்பி பட்டணம் நோக்கிப் பறந்தது.

இது சம்பவித்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குப்பின் பள்ளிக்கூட பஸ்ஸில் சாரதியானேன். தினமும் காலை ஊர் ஊராகப் போய் பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு இராமநாதன் கல்லூரியில் விடவேண்டும். மறுபடி மாலையில் அத்தனை பேரையும் அவரவர் வீட்டு வாசலில் கொண்டுபோய் விடவேண்டும். இந்த பஸ்ஸில் வேலைபார்த்த நாளில் சித்திரமேழிப் பக்கம் போகும் வாய்ப்புக் கிட்டியது. எப்பொழுதோ கோவிலுக்குப் போனபோது பார்த்த அதே சிறுமி இன்று- இந்த நாலு ஆண்டுகளுக்குள்ளாக, ஒரு மயில்பேடாக அடையாளம்கண்டுகொள்ள முடியாதபடி வளர்ந்து வனப்பு கொழிக்க நின்ருள். என் பஸ்ஸிலேதான் தினமும் கல்லூரி சென்ருள். பஸ்ஸில் தினமும் பள்ளிக்கூடம்

> கண்கள் நேரே நோக்கட்டும், புனிதபொருட்களையே காணட்டும். காதுகள் பகவானுடைய துதிகளையே கேட்கட்டும் அல்லது துக்கப்படுவோரின் குறைகளையேகேட்கட்டும். கைகளும் கால்களும் பொதுநலத் தொண்டில் ஈடுபடட்டும். சகலபுலன்களும் மானிட சேவையிலேயேஈடுபட்டுஉழைக்கட்டும். அதிலேயே ஈஸ்வர அனுக்கிரகம் அவசியம் சித்திக்கும்.
>
> —கீதாபோதனையில் காந்தி அடிகள்.

## ஒன்று திரளுங்கள்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

நாடுகளில்கூட தொழிலாளர் தினமாக அங்கீகரிக்கப்பட்டு, பொது விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது, மே தினத்தின் சக்திக்குச் சான்ருகும்.

எட்டு மணிநேர வேலையைப் பெற்றுத்தந்ததன் மூலம் மேதினம் தொழிலாளப்பெருமக்களுக்கு முதலாவது பெரும் வெற்றியை அளித்தது. வேறுபல முக்கிய கோரிக்கைகளையும் உரிமைகளையும்தொழிலாளர்பின்னர் பெறுவதற்கும், பெறப் போராட்டம் நடாத்துவதற்கும்மேதினம் முன்னேடியாக விளங்கியது. ஆதலால்தான் தொழிலாளரிடையே மே தினத்துக்கு இவ்வளவுதூரம் மதிப்பு உள்ளது.

### திடசங்கற்பம்

மே தினம் தொழிலாளர் உயிர்த்தியாகத்தில் உதித்தது. ஆகவே மே தினத்தை வெறும் கொண்டாட்டங்கள்மூலம்கழிப்பதில்பிரயோசனமில்லை. இவ்வளவு தியாகத்தின் மூலம் பெறப்பட்ட உரிமைகளைக்கட்டிக்காப்பது என்ற திடசங்கற்பத்துடன் எமது கடமைகளையும் நாம் நிறைவேற்றவேண்டுமென்ற உறுதியையும் தொழிலாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## அகிலம் போற்றும...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் யாவற்றிலும் இன, மதபேதமற்று, போட்டி பொருமைகள் மறந்து ஆதரவு தரும் பட்சத்தில், இன்னும் ஒரு சில ஆண்டுகளில் மலையக தொழிலாளர்களும் இந்நாட்டின் ஏனைய பிரஜைகளைப்போல் நாட்டில் நல்ல பிரஜைகளாக ...

## உலக மேடை

எஸ். எம். ஜி.

# மேனன் தோல்வியும் சிவசேனையும் தேசீய ஒருமைப்பாட்டுக்கு ஒரு சவால்?

திரு. வி. கே. கிருஷ்ண மேனன் மீண்டும் தோல்வியடைந்துவிட்டார். வடகிழக்கு பம்பாய்தொகுதியிலிருந்துலோகசபைக்குநடைபெற்றஉபதேர்தலில்போட்டியிட்ட திரு. மேனன் வெற்றிபெறுவாரென்றே பலரும் எதிர்பார்த்தனர். எதிர்பார்த்ததற்குமாருக உபதேர்தலில் மேனன் தோல்வியடைந்துவிட்டார். தோல்விக்குக் காரணம் என்ன? பம்பாயில் இயங்கும்'சிவாஜி சேனை' எனப்படும் 'சிவசேனை' என்ற வகுப்புவாத இயக்கமேதனதுதோல்விக்கு முக்கிய காரணம் என்று தோல்வியடைந்த மேனன் கூறுகிறார். மேனன் தன்னைப் பற்றித் தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டதுதான் இதற்குக்காரணம்என்று மற்றும் சிலர் கூறுகின்றனர்.

இந்தியாவின் விடுதலைக்காக இங்கிலாந்திலேயே அரிய பெரிய காரியங்களைச் செய்திருந்த திரு. மேனன் இந்தியாவில் அரசியலில் ஈடுபட்டதற்குஅவரை நன்கறிந்திருந்த காலஞ்சென்ற பிரதமர் நேருவே காரணமாக இருந்தார். மேனனின் திறமையிலும் நாவன்மையிலும் நேரு அதிகம் நம்பிக்கை வைத்திருந்தார். இந்தியாவின் தேசீய ஒருமைப்பாட்டில்அதைவிட அதிக நம்பிக்கை வைத்திருந்த நேரு, மேனனை மகாராஷ்டிரத்தின் தலைநகரான பம்பாயில் வடக்குப்பம்பாய் லோகசபைத் தொகுதியில் தேர்தலில்நிறுத்தினர். அவர் வெற்றியும்பெற்றுக்கொடுத்தார். கேரளத்தில் ஒரு தொகுதியில் அவரை நிறுத்தியிருந்தாரானுல் இன்னும் மேனன் சுலபமாக வெற்றி பெற்றிருப்பார். காமராஜரின் யோசனையையும் மற்றையோரின் வேண்டுகோளையும் மேனன் ஏற்றிருந்தாலும் இன்றுவேறொருதொகுதியிலிருந்து பார்லிமெண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருப்பார். பார்லிமெண்டில் எப்படியும் அங்கம் வகிக்க வேண்டுமென்பதே அவரது கொள்கையாக இருந்திருந்தால் தென்சென்னைத்தொகுதியிலோ, கேரளத்தில் ஒரு தொகுதியிலோ மேனன் போட்டியிட்டிருப்பார். வடபம்பாய்த் தொகுதிக்கு லோகசபையில்பத்துவருடங்கள்பிரதிநிதித்துவம் வகித்த மேனன் தொகுதி விஸ்தரிப்புக் காரணமாக வடகிழக்குப் பம்பாய்த் தொதியான புதியதொகுதியில்சென்ற பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு காங்கிரஸிடம் அனுமதி கேட்டதும் காங்கிரசுக்குள்ளேயே வலதுசாரி- காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்துப் போட்டியிட்டிருந்தாலும்கூட, நேரு இருந்திருந்தால் இந்த உபதேர்தலில் மேனனை எதிர்த்துக் காங்கிரஸ் ஓர் அபேட்சகரை நிறுத்த அனுமதித்திருக்கமாட்டார் என்று நிச்சயமாகக் கூறலாம்.

### சிவாஜி சேனை

### கல்கத்தாவிலும்..

பம்பாயில் அதாவது 'மகாராஷ்டிரம் மராட்டியர்களுக்கே' என்ற 'சுலோகத்துடன்' ஆரம்பித்த மராட்டிய வீரன் வீரசிவாஜியின் பெயரில் இயங்கும் ''சிவாஜி சேனை'' ('சிவசேனை' என்பது அதன் சுருக்கப் பெயர்). தான் தனது தோல்விக்கு முக்கிய காரணமென்று மேனன் கூறுகிறார்.

இந்த வகுப்புவாத இயக்கத்துக்கும் காங்கிரசுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகவும் மேனன் கூறுகிறார். பொதுத் தேர்தல் சமயத்திலும் உபதேர்தல் சமயத்திலும் ''சிவாஜி சேனை'' இல்லை, ''சிவசேனை''யினர் வன்முறைச் செயல்களில் இறங்கியதும் மேனன் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதுடன் மோட்டார்கார்களுக்குத் தீவைக்கப்பட்டதும் அவர்கள்மீது பொலிசார் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறியதும் மேனனின் குற்றச்சாட்டில் உண்மை உள்ளதென்பதை ஊர்ஜிதப்படுத்துகிறது. பம்பாயிலுள்ள தென்னிந்தியர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டுமென்பதுதான் இந்த 'சிவசேனை' இயக்கத்தின் நோக்கம். இந்த இயக்கத்தின் பயமுறுத்தல் காரணமாக பம்பாயில் தமது ஆதரவாளர்கள் சுமார் முப்பதினுயிரம் பேர் வாக்களிக்கச் செல்லவில்லையென்றும் இந்த வாக்குகள் களவாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. மேனன் குற்றம் சாட்டியிருக்கிருர். இக்குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை, இந்தியாவின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கவும், தேர்தல் ஒழுங்கான முறையில் நடைபெறவும் மேனனின் குற்றச்சாட்டுபற்றி ஆராயவேண்டியது இந்திய அரசாங்கத்தின் கடமைகளில் ஒன்று.

பம்பாய் ''சிவசேனை' இப்பொழுது கல்கத்தாவுக்கும் பரவியுள்ளதாம். ''மூன்று மாதங்களுக்குள் கல்கத்தாவைவிட்டு வெளியேற வேண்டும் இல்லையேல் நாங்கள் வேறு வழிகளைக் கையாள்வோம்'' என்று இயக்கத்தினர் அங்குள்ள தென்னிந்தியர்களுக்குமிரட்டல் கடிதம் அனுப்பியிருக்கிறது. இதுபற்றி ஆராய்வதாக மேற்கு வங்க உள்விவகார மந்திரி உறுதியளித்திருக்கிருர்.

### லட்சம்

### கையெழுத்து!

திரு. மேனனை வடபம்பாய்த் தொகுதியில் போட்டிக்கு நிறுத்தவேண்டும் என்று சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட கையெழுத்துக்களுடன் காங்கிரஸ் மேலிடத்துக்கு மகஜர் அனுப்பப்பட்டது. இந்த உபதேர்தலில் திரு. மேனனுக்கு சுமார் ஒன்றரை லட்சம் வாக்குகளே கிடைத்திருக்கின்றன. பொதுத் தேர்தலுக்கும் உப தேர்தலுக்குமிடையில் ஆதரவு குறைந்ததா? 'சிவசேனை'யின் மிரட்டல் அரை லட்சம்பேரை அஞ்சவைத்து விட்டதா? அல்லது இரண்டு லட்சம் கையெழுத்து வெறும் ''டுப்பா?''

''திராவிடநாடு திராவிடருக்கே'' என்று திராவிடர் கழகம் முழங்கியதும்அதைத் தொடர்ந்து ''தெற்குத் தேய்கிறது வடக்கு வளர்கிறது'' என்று தி. மு. க. கழகம் பிரிவினை காட்டிக்கூறியதுமேதான் பம்பாயில் 'சிவசேனை' தொடங்கக்காரணம் என்று கூறப்பட்டது.

தமிழ்நாட்டில் பிரிவினைக் கொள்கை கைவிடப்பட்டது. வட இந்தியருக்கெதிராக வன்முறைச்செயல்களும் நடைபெறவில்லை. இந்நிலையில் பம்பாயிலுள்ள சிவசேனை இப்பொழுது கல்கத்தாவுக்கும் விஸ்தரிக்கப்படுவது ஏன்?

'சிவசேனை' போன்றவகுப்புவாதஇயக்கங்கள் காலூன்றுவதும், மது விலக்குக் கொள்கை கேரளத்திலும் மற்றும் சில இடங்களிலும் கைவிடப்படுவதும்கட்சிவிட்டுக்கட்சிமாறி நாளுக்கொரு அரசாங்கங்கள் சில ராஜ்யங்களில் பதவியிலிருப்பதும், பீகாரிலும் பட்டினிச்சாவு ஏற்படுவதும் இந்தியாவின் வருங்காலத்தைடபற்றி இந்திய மக்கள்பற்றி மற்றையோரும்அச்சமும், கவலையும் கொள்ளவேண்டிய நிலையை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

சர்வோதயத் தலைவர் ஜயப்பிரகாஷ்நாராயண்கூறுவதுபோல் கட்சி, மாகாணம் என்ற குறுகிய நோக்கங்களைக்கைவிட்டு தேசீய அரசாங்கம் ஒன்றை அமைக்க அனைவரும் முன்வராவிடில் சில அமெரிக்கர் கூறியிருப்பதுபோல் இந்தியாவில்ஜனநாயக ஆட்சிக்கே அபாயம் நேரலாம்.

> உழைப்பின் பயனுய் ஜீவிப்பவனே உயிர்பெற்றவனுகிறன். எவனும் படுத்துக்கொண்டே உயிர் வாழமுடியாது.
>
> — கீதாபோதனையில் காந்தி அடிகள்.

## அமெரிக்க அரசாங்கத்துடன் கிளே நடத்தும் மல்யுத்தம்

உலக அதிபார குத்துச் சண்டை சாம்பியனுன காஸியஸ் கிளே எனும்முகம்மதலி கிளேயின் 'சாம்பியன்' பட்டத்தை அமெரிக்க அரசாங்கம் பறித்தெடுத்துக்கொண்டது. இந்தப் பட்டத்துக்காக காஸியஸ் கிளேயுடன் 'யுத்தம்' செய்து கிளேயின் 'இரும்பு'க்கரத்தால் குத்து வாங்கிய வீரர்கள்கூட அமெரிக்க அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை ஆதரிக்க மாட்டார்கள். வியட்னுமின் மக்களின் ''சுதந்திரத்தை'' பாதுகாப்பதற்காக வியட்னும்ல் வியட்னும்மக்களுடன் அமெரிக்கா நடத்தும் சண்டையில் அமெரிக்காவுக்காகச் சண்டை பிடித்துச் சாகும் 'பலிக்கடாவாக' காஸியஸ்கிளேயை அனுப்புவதற்கு அமெரிக்க அரசாங்கம் தொடர்ந்து முயற்சி செய்துவருகிறது. அமெரிக்காவுக்கும் தனது நீக்ரோ இனத்துக்கும் பெயரையும் புகழையும் சம்பாதித்துக் கொடுத்திருக்கும் காஸியஸ் கிளேஒருமல்யுத்தப்போட்டி மூலம் ஒரு யுத்த விமானத்தையே வாங்கிக்கொடுக்கக் கூடிய சக்தி படைத்தவர். அவரை வியட்னும் சென்று யுத்தம் செய்து பலியாகுமாறு அமெரிக்க அரசாங்கம் பிடிவாதமாகக் கூறுவது ஏன்? இதுஇனப்பாகுபாடா? கிளே தாம் வியட்னும் செல்லப்போவதில்லையென்று உறுதியாகத் தெரிவித்துவிட்டார். கிளேயின் மறுப்பின் விளைவுதான் அவரது சாம்பியன் பட்டத்தை அமெரிக்கா பறித்திருப்பது இன்னும்பல தண்டனைகள் இருக்கிறதாம். அதில் ஒன்று அவரைச் சிறைக்குஅனுப்புவது. அமெரிக்காவில் தமது நீக்ரோ மக்களின் உரிமைக்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6-ம் பக்கம் பார்க்க)

நீரூற்றில் நீராடிவிட்டுநின்ற போதுதான் அரும்புமலராக முதலில் அவளைச் சந்தித்தேன். இதே கீரிமலையில் கந்தசுவாமிகோவில் யாத்திரைப் பாதையில்தான் எங்கள் வாழ்க்கைக்கதையின் முதல் அத்தியாயம் எழுதப்பட்டது.

காலஞ்சென்றவ ஒரு சின்னப் பொடிச்சியாக தன் சிறியதாய் முறையான ஒரு பெண்ணுடன் கூட ஐப்பசி கந்த சஷ்டியின் போது ஒருநாள் கீரிமலையில் தீர்த்தமாடிவிட்டு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு நடந்துபோய்க் கொண்டிருந்தார்கள். இன்றைக்குப்போல் அல்ல, அந்நாளில் ஐப்பசி வெள்ளி, கந்தசஷ்டி தினங்களில் கீரிமலை மாவிட்டபுரத்தைச் சுற்றிவர உள்ள ஊர்களில் வசிப்பவர்கள் விடியற்சாமத்தோடு எழுந்து கூட்டம் கூட்டமாகக் கீரிமலை போய் தீர்த்தமாடிவிட்டு அதன்பின் மாவிட்டபுரம் கோவிலுக்கு உதயபூசை காணப்போய்விடுவார்கள். இந்த முருக வழிபாட்டில் அடை மழை பெருவெள்ளம் ஒன்றும் பார்க்காமல் பெண்கள்தான் பெரும்பகுதியாக முன் நிற்பார்கள். ஈரச் சேலையுடனே முருகனிடம் ஓடி ஓடிப்போவார்கள். அப்பொழுது நான் பஸ் கண்டக்டராக வேலைபார்த்துக் கொண்டிருந்தேன். அன்றைக்கு கோவிலுக்குப் போகும் பாதையில் நடுவழியில் திடீரென்று மழைபிடித்துக்கொண்டது. கந்தசஷ்டியுடன் சேர்ந்தாற்போல தீபாவளியும் அன்றைக்குத்தான். கோவிலுக்கு நடந்து போனவர்கள் நடுவழியில் மழை ஊற்றத்தொடங்கவே ஓடி ஒதுங்க இடமில்லாமல் தவித்தார்கள். தீபாவளி புதுப் பாவாடை சட்டையுடனே ஒருசிறு பிள்ளை மழையில் நனைந்ததைக் கண்டு டிரைவர் பஸ்ஸை நிற்பாட்டி அவளோடு கூடப்போன அத்தனை பேரையும் பஸ்ஸில் ஏற்றிக்கொள்ளச் சொன்னர்.-''

''பஸ் டிரைவர் பிள்ளை குட்டி பெற்ற குடும்பகாரனுயிருக்க வேண்டும்'' இது, பெரியவர் கூறும் கதையில் என் மன ஈடுபாட்டைக் காட்டுவதற்கு எழுந்த குறிப்புரை. ''என்னவோ அவருடைய அப்போதைய மனநிலை அப்படியிருந்தது. கோவிலடிச் சந்தியில் எல்லோரையும் இறக்கிவிட பஸ் நின்றது. அந்தச் சிறுமி கல்லூரி சென்றுள். பஸ்ஸில் தினமும் பள்ளிக்கூடம் சென்ற அத்தனை பேர் மத்தியிலும் அவள் ஒரு சித்திரப் பாவையென, பருவத்தின் லளிதலாவண்யம் முழுவதும் பொலிய தனிக் கவர்ச்சியுடனே சோபித்தாள். இந்த நாலு ஆண்டு பஸ் சாரத்தியத்தின்போது அவள் வாழ்க்கையையும் ஒரு பாதைக்கு இழுத்துச் சென்று நிர்ணயப் படுத்திவிட்டேன்போல் தோன்றிற்று.

''என்ன, ஒவ்வொரு நாளும் விடிய எழுந்து கீரிமலைக் கேணிக்குப் போய்த் தோஞ்சுவிடுவீரா?'' என்றேன் ஒரு நாள் அவளிடம். அதற்கு ஒரு சிரிப்புத்தான் பதிலாகக் கிடைத்தது. அந்தச் சிரிப்பிலே நான் கிறங்கிப்போனேன். அதன்பின் அவள் நோக்கு அர்த்தபுஷ்டியுடையதாகவிருந்தது. சில காலத்தில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு யாழ்ப்பாண நகரில் எங்கேயோ வேலை பார்க்கத்தொடங்கினுள். அதன்பின் நானும் பள்ளிக்கூட பஸ்ஸில் வேலைபார்ப்பதைவிட்டு பிரயாணசேவை பஸ்ஸுக்கு மாறினேன்.

இப்படியாக வளர்ந்த உறவுதான் நாளடைவில் இருபேரையும் ஊரைவிட்டே விரட்டிவிட்டது. பஸ் கம்பெனிக்கு என்னைப்பற்றி முறைப்பாடு போய், எனக்கு வேலை போச்சு. அவளுக்கும் சங்கடமான நிலைமை. ''எங்கேயாவது ஓடிப்போய்விடுவோம்'' என்றுள் ஒரு நாள். நானும் உடன்பட்டேன். கிளம்பிவிட்டோம். யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியூர் போய் நான் புதிதாக வேலை தேடிக்கொண்ட பிற்பாடுதான் அங்கு பதிவுத் திருமணம் செய்துகொண்டு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பிறந்து வளர்ந்த நாட்டை எட்டியும் பார்க்காமல் காலத்துக்குக்காலம் பல ஊர்களிலும் சென்று வசித்தோம். நமது இருபேருக்கும் நினைவுச் சின்னமாக இருக்க ஒரே ஒரு பெண்குழந்தைதான் எங்கள் வாழ்வில் எஞ்சியது. அவளைத்தான் பார்த்திரே கேணிக்கரையில்-''

இவ்வாறு கூறிவிட்டு எப்பொழுதோ அணைந்துபோயிருந்த சுருட்டை எடுத்து மீண்டும் பற்றவைக்கலானுர்.

''ஆம், பார்த்தேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னுலும் போய் கற்பனை செய்துபார்த்தேன். அப்படி ஒன்றும் நடக்கக்கூடாத புதுமையாகத் தோன்றவில்லை. இன்றைக்கெல்லாம் இது மாதிரிக் காரியங்களுக்காக உலகத்திலிருந்தே அடியோடு ஒழிந்து மறைந்து போய்விடுகிருர்களே, பெரியவர்'' என்றேன். 'இவ்வளவு துணிச்சல்மிக்ககதையா உங்கள் வாழ்க்கை. பார்த்தால் இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல பரமசாதுவாகத் தோன்றுகிறீர். கண்களைக் கூட நம்பக்கூடாதுதான். இந்த நீரூற்று இப்படி இன்னும் எத்தனை கதைகள் சொல்லுமோ'- மனதுள் எண்ணியவனுக எண் கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். ஆறு மணி காட்டியது. தலைக்கு மேலே மின் விளக்குப் பளிச்சிட்டது. பெரியவர் திரும்பித் திரும்பி யாரையோ எதிர்பார்ப்பது போல நோக்கலானுர். நான் எழுந்து சென்று சைக்கிளை உருட்டிக்கொண்டு அவர் முன் நடந்தேன்.

''என்ன ஆயத்தமா, போகப்போகிறீரா?''

''ஓம் பெரியவர்.''

''சே, எவ்வளவு நேரமாகிவிட்டது. வாருமன் மடத்துக்குப் போய் தேநீர் குடித்துவிட்டுப் போகலாம்.''

யாதொன்றும் கூருமலே சைக்கிளைப் பிடித்தபடி நின்றேன்.

''என்ன முயற்சி நடக்கிறதோ?''

''நான் இ. போ. ச. வில் வேலை பார்க்கிறேன் பெரியவர், இன்று எனக்கு ஓய்வு நாள்.''

''சரி சரி பின்னே போய் வாரும்.'' சொல்லியவராய் சரேலென ஆசனம் விட்டெழுந்தார் அந்தச் சாது மனிதர்.

என் சைக்கிள் வீடு நோக்கிப் பறந்தது.

[யாவும் கற்பனை]

---

களைப்போல் நாட்டில் நல்ல பிரஜைகளாக வாழ முடியும். அதற்கான ஏற்பாடுகளையும் கழகம் மேற்கொள்ளும்.

இந்த தொழிலாளர்களின் தினமான மேதினத்தில் மலையக தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டு நாட்டின் ஏனைய பிரஜைகளைப்போல் தன்மானத்துடனும், சுதந்திரத்துடனும் வாழ, உங்கள் உரிமைகளைப் வென்றெடுக்க வாரீர்! வாரீர்!

வாழ்க தொழிலாளர்கள்! வளர்க அவர்களின் ஒற்றுமை!!

---

அனுமதி கேட்டதும் காங்கிரசுக்குள்ளேயே வலதுசாரி-இடதுசாரி என்ற பிரிவினை மேனனுக்கு காங்கிரஸ் அனுமதியளிக்கத் தடையாக இருந்ததும், இதற்கு முழு முதற்காரணமாயிருந்த எஸ். கே. பட்டீலும்சென்ற பொதுத்தேர்தலில் தோல்வியடைந்ததும் காங்கிரஸ் தனது அபேட்சகராக நிறுத்தாவிட்டாலும்வாக்காளரை நம்பிகாங்கிரசைவிட்டுவிலகி மேனன் சுயேச்சையாகப் போட்டியிட்டதும் பழைய விஷயம். மேனனுடன் பொதுத்தேர்தலில் போட்டியிட்ட செல்வந்தரான எஸ். ஜி. பார்வே திடீரென மரணமடைந்ததைத் தொடர்ந்து இந்த உபதேர்தல் நடந்தது. உபதேர்தலில் பார்வேயின் சகோதரி திருமதி தாரா சாப்ரே காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றிருக்கிருர்.

1957-ம் ஆண்டில்பொதுத் தேர்தலில் அப்போதைய பிரஜாசோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. அசோக் மேத்தா தோல்வியடைந்தார். அதன்பின்னர் மற்ெருரு தொகுதியில் நடந்த உபதேர்தலில் அசோக்மேத்தா போட்டியிட முன்வந்தார். அச்சமயம் அந்தத் தொகுதியில் அசோக் மேத்தாவை எதிர்த்துப் போட்டியிட சில காங்கிரஸ்காரர்கள் 'நான், நீ' என்று முந்திக்கொண்டு வந்தனர். ''அசோக் மேத்தா ஒரு அரசியல் தலைவர், பொருளாதார நிபுணர். அவரது கருத்து அரசாங்கத்துக்கு உதவியாக இருக்கும். அவர் பார்லிமெண்டில் இருக்கவேண்டும்'' என்று கூறி உபதேர்தலில் அசோக்மேத்தாவுக்கு எதிராக காங்கிரஸ் ஓர் அபேட்சகரை நிறுத்தக்கூடாதென்று ஸ்ரீ நேரு கூறிவிட்டார்.

கேரளத்தில் அரசியல் 'இழுபறி' நடந்தபோது நிலைமையைச் சமாளிக்கச் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பட்டம் தாணுப் பிள்ளைக்கு கவர்னர் பதவி கொடுத்த லால்பகதூர் சாஸ்திரியின் அரசியல் சாதுர்யத்தையும் மிஞ்சி அசோக் மேத்தாவையே நேரு தன் பக்கம் இழுத்து திட்டக் கமிஷனுக்குள் பின்னர் நுழைத்துவிட்டது வேறு விஷயம்.

திரு. மேனன் காங்கிரஸிலிருந்து விலகிவிட கிழக்கு பம்பாய்த் தொகுதியில் சென்ற பொதுத் தேர்தலில்

---


# இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்


பெரும்பான்மையான பற்கள் அழுகியல்ல, ஆனல் ஈறு வியாதிகளினுலேயே இழக்கப்படுகின்றன என உங்கள் பல் வைத்தியர் கூறுவார்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்பற்கள் வளரும். பற்களை வெண்மையாக துலக்கவும் ஈறுகளை உறுதியாக தேய்க்கவும் போர்ஹான்ஸின் பாதுகாப்பு என்றும் அவர்களுக்கு அவசியம்.

உறுதியான
ஆரோக்கியமுள்ள
ஈறுகளுக்கும் உரமான
வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்.

## போர்ஹான்ஸ்
பற்பசை



புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.





# உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்


உரம் பற்கள், உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகள் இருக்கும்வரை உரமாக இருக்கும். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல, ஆனல் ஈறு வியாதிகளினுலேயே இழக்கப்படுகின்றன என உங்கள் பல் வைத்தியர் கூறுவார்.

பற்களை வெண்மையாக துலக்கவும், ஈறுகளை உறுதியாக தேய்க்கவும் போர்ஹான்ஸின் பாதுகாப்பு என்றும் உங்களுக்கு அவசியம்.

உறுதியான
ஆரோக்கியமுள்ள
ஈறுகளுக்கும் உரமான
வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்.

## போர்ஹான்ஸ்
பற்பசை



புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.

324/67


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரத்தில் உங்கள் பலன்

**பண்டித வித்துவான் எம் வி பாலசுந்தரம் பி ஓ எல்., எவ். ஆர் ஏ. எஸ்.**

மேடம்: இவ்வாரம்சிறந்த பலன்களைத் தரும் வாரமாகும். அதிக பிரயாசையால் பொருள் வரவேற்படும். குடும்பசுகம் நன்ருகவே காணப்படும். தொழில்வகையில் ஒப்பந்தம் செய்வோர் நன்மையடைவார்கள். கல்விமான்களுக்கு மிக நல்ல வாரமாகும். தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்படும். வியாபாரம் மேலோங்கும். வைத்தியத் துறையினருக்கு அதிக வருமானம் உண்டு. செலவுகள் சாமானியமாகவே நடைபெறும். திடீர் பிரயாணங்களை மேற்கொள்வார்கள். பலருக்குப்பாராட்டுகளும் பட்டங்களும் கிடைக்கும்.

இடபம்: இவ்வாரம் மத்திமமான பலன்களைத்தரும் வாரமெனலாம். நண்பர்களால் நன்மைகளுண்டு. பிரயாணத்தினுல் வீண் செலவுகளுண்டு. தன வருவாய் குறைவடையும். வியாபாரவகையினருக்கு மத்திம இலாபமுண்டு. இனசனக் கொண்டாட்டமுண்டு. வாகனம் மாற்ற, விற்க, வாங்க மிக நல்லவாரம். சங்கீதத் துறையினருக்குப் பெரும் புகழ் உண்டு. உத்தியோக வகையினருக்கு இராச தொல்லைகளுண்டாகும்.

மிதுனம்: இவ்வாரம்மிகச் சிறந்த வாரமாகும். வியாபாரிகளுக்கு வியாபாரம் விருத்தியடையும். இலாபமுமுண்டு. வைத்தியர்களுக்கும் கலைஞர்களுக்கும் மிக நல்ல பலனுண்டு. தேவைக்குப் போதிய வருமானமுண்டு. குடும்பகௌரவமேற்படும். சத்துருக்களின் தொல்லைகள் மறைவாக இருந்து இன்னல் விளைவிக்கும், உத்தியோக வகையினருக்குப் பதவிப்பேறுண்டாம். தேகசுகம் நன்ருகவே இருக்கும், பெண்களின் கொண்டாட்டத்தினுல் தொல்லைகளுக்குள் சிக்கிக் கஷ்டப்படுவார்கள்.

கடகம்: இவ்வாரம் நல்ல பலன்களைத்தரும் வாரமாகும். உத்தியோகஸ்தர்களுக்கு மிக முன்னேற்றம் காணும் வாரமாகும். தொல்லைகள் நீங்கும். பணவருவாயுண்டு. காரியானுகூலமுண்டு. பிரயாணவகையில் பொருள் கிடைக்கும். இவ்வாரமத்தியில் களத்திர சுகமேற்படும். பெண்களினுல் தனவிரயமுண்டு. வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் அதிக லாபமுண்டு.

சிங்கம்: இவ்வாரம் மிகவும் நல்லவாரமாகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவார்கள். சொத்துக்கள் சேரும். குடும்பத்தில் மன அமைதி நிலவும். சகோதரர்களால் உதவிப்பேறுண்டு. அரசாங்கத் தொழிலிலுள்ளவர்களுக்குஅதிகமுன்னேற்றமுண்டு. செலவுகள் சாதாரணமாக இருக்கும்.

கன்னி: இவ்வாரம்மத்திமமான பலன்களைத்தரும்வாரமெனலாம். உத்தியோகஸ்தர்களுக்கு பல தொல்லைகள் இருந்தபோதிலும் நன்மைகள் நடந்து கொண்டே இருக்கும். அதிக பாடுபட்டு பதவியேறுவார்கள். காரியங்கள் பொதுவாகக் கைகூடும்.

துலாம்: இவ்வாரம் மிக நல்ல வாரமாகும். மனைவியின் ரோகம் நீங்கும். நண்பர்களினுல் உதவிப்பேறுண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பாராத வகையில் முன்னேற்றமுண்டாகும். இயந்திரத்தொழிலாளர்கள், சாரதிகள் கவனமாக இருக்கவும். வியாபாரத்துறையிலுள்ளார்க்கு மிகவும் முன்னேற்றமுண்டு.

விருச்சிகம்: இவ்வாரம் மத்திம பலன்களைத் தரும் வாரமெனலாம். வைத்தியத் துறையினருக்கு வருமானம் அதிகரித்தலுண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு அதிக நன்மைகளும் தனஇலாபமுமுண்டாகும். இயந்திரத் தொழிலாளர்கள், சாரதிகள் மிகவும் கவனமாக நடந்து கொள்ளவும். சத்துருதொல்லைகள் நீங்கும். நண்பர்களினுல் சுகமேற்படும். களத்திரத்தினுல் சுகமுண்டாகும். காரியங்கள் சிறிதுதாமதமாகக் கைகூடும்.

தனு: இவ்வாரம் நன்மை தரும் வாரமாகும். காணி பூமித்தகராறுகள் நீங்கும். காரியானுகூலமுண்டாகும். உத்தியோகத்தர்களுக்குப் பதவிப்பேறுண்டு. பொருள் பற்ருக்குறைவு தீரும். செல்வாக்கான பல காரியங்கள் நடைபெறும். வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் அதிக இலாபமுண்டு. புத்திரர்களால் நன்மையும், கீர்த்தியுமுண்டு. குடும்பத்தில்இருந்துவந்த சச்சரவுகள் நீங்கும். மங்கலச்சிறப்புகள் இல்லத்தில் நிகழும். வீண்வகையில் பொருள்செலவழிய வேண்டிவரும்.

மகரம்: மிக முன்னேற்றமான வாரமாகும். வியாபாரத்துறையினருக்கு வியாபாரம் அதிக முன்னேற்றமடையும். இலாபமதிகமேற்படும். இயந்திரத் தொழிலில் ஈடுபாடுடையோர் ஆபத்துக்களில் சிக்கவேண்டிவரும்.அவதானமாக இருக்கவும். பழையகடன்கள் நீங்கும். தொழில்வகையில் இலாபம் அதிகமேற்படும். வழக்குகளில் ஈடுபாடுடையோர் வெற்றியடைவார்கள். இனபந்துக்களில் முக்கியஸ்தர்கள் மரணமடைதலுமுண்டு.

கும்பம்: இவ்வாரம் கஷ்ட பலன்களைத்தரும் வாரமாகும். தேகாரோக்கியம்குறைவடையும். பிதாவுக்குப் பல தொல்லைகளையும் நோயையும் கொடுக்கும். தனமுடையேற்படும். காரியங்களில் தடையும் தோல்வியும் உண்டு. வாரமத்தியில்தனப்பெருக்கமுண்டாகும். நல்ல மங்கலமான கருமங்கள் குடும்பத்தில் நிகழும். இல்லச் சிறப்புகளுண்டு. பொருள் பற்ருக்குறைவு வார மத்தியில் தீரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் நஷ்டமடையும்.

மீனம்: இவ்வாரம்நன்மை தரும் வாரமெனலாம்.குடும்பத்தில் மனச் சந்தோஷம் ஏற்படும். பொருள்வரவுண்டு. போசன மகிழ்வுண்டு. தொழிலாளர்களுக்கு மேன்மையும் வருவாயுமதிகரிக்கும். தேகாரோக்கியம் பொதுவாகக் குறைவுற்றேஇருக்கும். முன்னேற்றங்கள் தடைப்பட்டே கைகூடும். புத்திரர்களால் நன்மையும் புகழும் அடைவார்கள்.

# இராமாயணமா....


(2-ம் பக்கத்தொடர்ச்சி)

நான் அடியற்ற மரம்போல

சேட்டை எல்லைமீறிப்போன வேளை, வைதேகியின் பிரிவாற்ருமையினுல் கலங்கி நிற்கும் ஸ்ரீராமன் தன்கைப் பிரம்பினுல் அவர் முதுகில்

# மாவட்ட சபை மசோதா வருமா வராதா?

# ஜனநாயகத்தில் பெரும்பான்மை வகுப்புவாதத்தின் ஆபத்து



மாவட்ட சபைகள் அமைப்பதென்பது அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டகொள்கை. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் இரண்டு சிம்மாசனப் பிரசங்கங்களிலும்'மாவட்ட சபை' அமைப்பது பற்றித் தெரிவிக்கப் பட்டிருந்தது. எனினும் 'மாவட்ட சபைகள்' நாட்டைப்பிரித்துவிடும் என்றும் 'மாவட்ட சபைகள்'கள் அமைக்கப்பட்டபின் வடக்கே செல்வதானுல் 'பாஸ் போர்ட்' எடுக்க வேண்டிவருமென்றும் எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்துவருகின்றனர்.

''மாவட்டசபைகள் பற்றி மௌனம் சாதிப்பதால் அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையை மறைத்துவிட முடியாது. இதில் ஒளிவுமறைவுஎதற்கு? இன்றைய எதிர்க்கட்சியினர் கூறலாம்.

தமிழ்மொழிச் சட்ட (விசேஷ) விதிகள் கொண்டு வரப்பட்டபொழுது அதன் மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய பிரதமர் திரு. டட்லி சேனநாயகா, ''வாக்குறுதி கொடுத்தால் அதை நிறைவேற்றுவேன்'' என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருந்தார். முன்னைய அரசாங்கம் கொடுக்க உத்தேசித்திருந்த மாவட்ட சபைகளுக்கான அதிகாரங்களைவிட மிகக்குறைந்த அதிகாரங்களையுடைய மாவட்ட சபைகளையே தாம் வழங்குவதற்கு உத்தேசித்திருப்பதாகவும் பிரதமர் கூறியிருந்தார்.

ஆனுல் இதே துணிவுடன் மாவட்டசபைகள் மசோதாவையும் அவர் கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தால் இன்று இந்த அளவுக்கு சர்ச்சையும் எதிர்ப்பும் வளர்ந்திருக்காது. அவசரகால நிலை அமுலிலிருந்த சமயத்திலும் தமிழ் எம். பி.க்கள் பலர் தடுப்புக் காவலிலும் இருந்த நேரத்திலும்தான் நியாயமான அளவு தமிழ்மொழி உபயோக மசோதாவை



கொண்டுவந்து காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா, 1958-ம் ஆண்டில் நிறைவேற்றினர். இந்தச் சட்டத்துக்குவிதிகள்கொண்டுவரப்பட்டபொழுது அதை திருமதி பண்டாரநாயகாவும் மற்றும் எதிர்க்கட்சி

பத்திரிகைகள்கூட மாவட்ட சபைகளைப்பற்றித் தவருன அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில்ஏற்படுத்தி வருகின்றன. சுயாதீனப் பத்திரிகா சமாஜம் வெளியிடும் சிங்களப்பத்திரிகைகள்மாவட்ட சபைகள் பற்றி மோசமாக எழுதுவதுபோக இதே நிறுவனம் வெளியிடும் ஆங்கிலத் தினசரி நேற்றுஎழுதிய தலையங்கத்தில் பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் மாவட்ட சபைகள்பற்றிய அம்சத்தை [பிரதேசசபைகள்] எதிர்த்ததை பிரதமர் மறந்தா போனுர்'' என்று கிண்டிவிட்டிருக்கிறது. பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் மாவட்ட சபைகள்மசோதா பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டாலும்கூட அதுநிறைவேற்றப்படுமா என்பது சந்தேகமே.

## அரசியல்நிருபர்

உண்மையை வெளிவெளியாகக் கூறி எதிர்க்கட்சியினரின் பிரசாரத்துக்கு முற்றுப் புள்ளி வையுங்கள்'' என்று நல்[illegible]ம். பி.யும் தமிழரசுக் கட்சித் தலைவருமான டாக்டர் இ. மு. வி. நாக

## வாரசாரம்

இன்று தமிழரசுக்கட்சித் தலைவர்கள் பிரதமரைச்சந்தித்து மாவட்டசபைகள் பற்றி இறுதி முடிவு என்ன என்று கேட்கப் போகிருர்களாம். மாவட்டசபைகளை வகுப்பு, இனகண்கொண்டு பார்க்காமல் நாட்டின் நிர்வாகத்தையும் முன்னேற்றத்தையும் கருத்தில்கொண்டு சகல அரசியல்கட்சிகளும் ஆராயுமானுல் பிரச்னைக்கு இடமிருக்காது. எதிர்க்கட்சித்தலைவர்களை அழைத்து பிரதமர் இதுபற்றிப் பேசலாம். தமிழரசுக்கட்சியினரும் தனிப்பட்டமுறையிலாவது எதிர்க்கட்சியினரின் ஆதரவைத்தேடுவது நல்லது.

எதையும் எதிர்பார்ப்பதுதான் அரசியல்என்று சிலர் நினைப்பதுவும் எதிர்க்கட்சியினரை 'நிரந்தரபகைவர்கள்' என்று நினைப்பதுவும்தான் நமது கேடுகளுக்கெல்லாம் மூலகாரணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


1x2 **நன்றி**

எங்கள் திருமணத்தின் போது சமுகமளித்த உறவினர்களுக்கும் நண்பர்கட்கும், நல்லாசிகள், அன்பளிப்புகள் அனுப்பியயாபேருக்கும் எம் உள்ளங்கனிந்த நன்றியை இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேரின்பநாதன் - திரேசா
33, மாட்டின்வீதி,
யாழ்ப்பாணம் 1763.


## இலங்கை ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபனம்

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

34 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-40 பௌத்தவாசகம், 7-45 தமிழோடிசைபாடல், தோத்திரப்பாடல்கள், 8-15 ஞானமிர்தம்,

344 மீற்றர் & 49 மீற்றர்

8-30 முத்திநெறி, 9-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30குதூகலம்-மேதின விசேஷ நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15எங்கள்அதிதி, 1-00 கதம்ப நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 பாட்டு-புஷ்பரத்தினம், 6-45 கிராம சஞ்சிகை, 7-15விவேகசக்கரம், 7-45 தமிழ்மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 குதூகலம் — மேதின விசேஷநிகழ்ச்சி.


**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர் -விஜயகுமாரி நடித்த
**ஆனந்தி**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-[illegible]
ஜெமினி— சாவித்திரி நடித்த
**வல்லவனுக்கு வல்லவன்**


எவன் சேவையின் பொருட்டாகவே சேவை செய்கிருனே அவனே புனிதன்
—கீதாபோதனையில் காந்தி அடிகள்.


## வரிவிளம்பரம்

### தேவை

மனேஜர்

ஒரு பெற்ரேல் நிலையத்துக்கு [ஷெட்] மனேஜர் தேவை. கட்டுப்பணம் அவசியம். விளம்பர இல.1955 ஈழநாடு மே/பா யாழ்ப்பாணம் என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1955

### கல்வி

விண்ணப்பங்கள்:

எறிக்கா - தமிழ் தட்டச்சு இயந்திரம் தூக்கிச் செல்லக்கூடியது, சிறந்த நிலையில் உள்ளது. விலை ரூபா 625, அல்லது அதற்கு கிட்டத்தட்ட விண்ணப்பிக்கவும். அரசரத்தினம், 3, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளி. 1956

விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், பகல், மாலை வகுப்புகள், வேலையை எதிர்பார்க்கும் பட்டதாரிகளின் நன்மைக்காக, ஆங்கிலச் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கு [புக்-கீப்பிங்; வர்த்தக கணக்கு, சிங்களம் ஆகிய பாடங்களில் விசேஷ ஆறுமாத வகுப்பு. ஜீ. சி ஈ. [சாதாரணம், உயர்தரம்] மாணவர்களுக்கு எல்லா விஞ்ஞானப் பாடங்களும். பல்கலைக்கழக பிரவேச மாணவர்களுக்கு விசேஷ ஆங்கில வகுப்புகள். விண்ணப்பிக்க; அதிபர், எல்பெந்தெல், கல்வி நிலையம், சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளி. 1957

கல்வி

மருத்துவ தாதிமார் புகுமுகப் பரீட்சைக்கான கட்டுரைகள் ரூபா 4/- பொது அறிவு ரூபா 5/- தபால் கட்டணம் -/50 சதம். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1952

வகுப்புகள்

ஜி. ஏ. கியூ. தராதரம் வாய்ந்த ஆசிரியர்களினுல் புதிய பாடத்திட்டத்துக்கமைய வகுப்புகள் நடாத்தப்படுகிறது. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1951

வகுப்புகள்

சிங்கள வகுப்புகள் சமீபத்தில் ஆரம்பிக்கப்படவிருக்

# இராமாயணமா....

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

பொறுப்பு துறவுபூண்டமுனிவர் தலைமேல் விடிகிறது. அவரது ஆசிரமத்தில்தாயும் இரு குழந்தைகளும் வளர்கிறார்கள். குழந்தைகளை ஆசையுடனே கவனித்து பாசத்துடனே கல்வியும் வித்தையும் கற்றுக் கொடுக்கிறார் முனிவர். அவர்கள் அயோத்தியாபுரிவரை சென்று இராமாயண சுலோகங்கள் பாடுகிறார்கள். காவியம் பாடிய முனிவருக்குத் தண்டனையா அல்லது காவ்யரசனையில் எழுந்த நன்றிப்பெருக்கா இதெல்லாம்?

எப்படியானாலும், இதனையெல்லாம் மூலகாவியத்தின் பெருமையும் புகழும் ஓங்குகிறதேயல்லாது குறையவில்லை. காவ்யம் வளரவளர வால்மீகியும் உயர்கிறார். அநுமார்வாலும் நீளுகிறது. மயில்ராவணன் கதைகூட உண்டே, மறந்து போனீர்களா?

சிறுவர்களாயிருந்த நாம் குசலவ இராமாயண நாடகம் பார்க்கப்போனோம். எங்கள் வீட்டிலோ வயசானவர்கள் கூடியிருந்து பாரதக் கதை படித்தார்கள். மிகச் சிறிய வயசாயிருந்த போதிலும் பாரதக் கதை யுத்த காண்டத்திலே எங்களுக்கும் ஈடுபாடு உண்டு. அதையும் கேட்போம். இவ்வாறாகவீட்டிலே கேட்ட பாரதக்கதையும் கூத்துக் கொட்டகையிலே பார்த்தஇராமாயணக் கதையும் ஒன்றாகச் சேர்ந்து ஒருநாள்எங்களிடத்தேவீராவேச உணர்ச்சி வெறியைக் கிளப்பிவிட்டது. இரண்டு வீட்டுச் சிறுவர்களும் இரு கட்சியாகப் பிரிந்து ஆளுக்கு ஒரு குவியல் கல் பொறுக்கி வைத்துக்கொண்டு ஒரு முப்பது கவடு தூரத்தில் எதிரெதிராக நின்று சமர்விளைக்கலானோம். சொற்களும் கற்களும் வீறுற்று விர்ரெனப் பாய்ந்தன. விளக்கேற்றும் வேளை அர்ச்சுனனாக நின்று சமர் செய்த எனது தலையிலே லொட்டென ஒரு கல் அம்பு வந்து சாடி குபுகுபு என இரத்தம் பாயத் தொடங்கியது. அர்ச்சுனன் நான் அடியற்ற மரம்போல சாய்ந்தேன் அம்மா. இது சேதிவீட்டுக்குளட்டி பாட்டியம்மாள் ஓடிவந்து பார்த்துவிட்டு குய்யோ முறையோ என்று கூக்குரலிடலானாள். வாயில் புகையிலைச்சுருட்டும் தோளில் கொடியும் பட்டையும் சுமந்து அப்பொழுதுதான் தோட்டத்திலிருந்து திரும்பிய ஸ்ரீராமன் பாட்டியின் கூக்குரல் கேட்டு ஓடிவந்தான். பக்கத்துக் காட்டு வெளியிலே ஆடுமேய்த்துக் கொண்டு நின்ற குசலவ குமாரன் 'என்ன ஆச்சி அது?' என்று துடிப்போடு வினவியவனாக வேலி பாய்ந்து விரைந்துவந்தான். துறையிலிருந்து துணி மூட்டையுடனே திரும்பிக் கொண்டிருந்த கோசலா தேவி, மூட்டையைத் தெரு ஓரமாகப் போட்டுவிட்டு ஓடோடியும் வந்தாள்(ன்). பக்கத்துக் கடையிலே செத்தல் மிளகாய் வாங்க வந்திருந்த சீதைஅம்மன் போர்க்களத்திலே அர்ச்சுனன் சாய்ந்துவிட்ட சேதி அறிந்து பதைபதைத்து ஓடிவந்தாள்(ன்). ஜனக குமாரியுடனே கூட இளையபெருமாளும் அநுமாரும் பாட்டியின் அபயக் குரல் கேட்டு எங்கிருந்தோ திடீரென வந்து குதித்தார்கள்.

அநுமார் வந்தபோது கூடவே சஞ்சீவி மலையையும் கொண்டு வந்து சேர்த்தது போல எனக்குச் சற்றே சுய நினைவு மீண்டது. ஆனால் கண் விழித்துப் பார்க்க அஞ்சினேன். ஒரு சமயம் கூத்துக்கொட்டகையில் முன்வரிசையில் இருந்த என்னை இந்த அநுமார் அண்ணர் மேடைக்குத் தூக்கிக் கொண்டுபோய்விட்டார். அதனால்தான்இப்பொழுதும் அஞ்சினேன், சிலவேளை சஞ்சீவிபர்வதத்தின் சாரலுக்கே என்னைக்கொண்டுபோய் விடுவாரோ என்றெல்லாம் எண்ணினேன். அநுமார் வேஷம் தாங்கினால் மேடையில்வந்து சும்மாநிற்கக்கூடாதல்லவா? அதனால்தான் இப்படி ஏதாவது வால்தனம் செய்வார். கொட்டகையில் முன்வரிசையில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் சிறுவர் பக்கம்புலிபோலப் பாய்ந்து ஒரு சிறுவனைத் தூக்கி இடுக்கிக் கொண்டுமீண்டும் மேடைக்குத் தாவுவார். சிறுபயல் வீரிட்டுக் கதற மீண்டும் அவன் இருந்த இடத்தில் கொண்டுவந்து சேர்த்துவிடுவார். அனுமாரின் குரங்குச் சேட்டை எல்லையற்றுப்போன வேளை, வைதேகியின் பிரிவாற்றாமையினால் கலங்கி நிற்கும் ஸ்ரீராமன் தன்கைப் பிரம்பினால் அவர் முதுகில் இலேசாக ஒன்றிரண்டு போட்டு ஆளை நிதானப்படுத்திவைப்பார். அனுமார் இப்படி சும்மா தாவிக்குதிப்பதோடுமட்டும் நின்றிவிடாமல் பாட்டுக்கூடப்பாடுவாரே.

போர்க்களத்தில் அர்ச்சுனன் கல்லடிபட்டு சாய்ந்தபோது எழுந்த இத்தனை பரபரப்புகள் நடுவே எதிர்க் கட்சியில் அணிவகுத்துநின்ற துரியோதனாதியர் கூட்டத்தில் ஒரு பயலைக்கூடக்காணவில்லை. மாயமாக மறைந்தோடிவிட்டார்கள். ஆனால் என் பாட்டியா விடுவாள்? அவர்கள் வீடுகளுக்கே தேடிப்போய் வாக்குமூலம் கொடுத்துவிட்டுத்தான் வந்தாள். இதன்பின் சிலகாலம் இந்த இரண்டு மூன்று வீட்டுச்சிறுவர்களும் சேர்ந்து பழகக்கூடாது, விளையாடக் கூடாது என்று மேலிடத்திலிருந்து கண்டிப்பான உத்தரவு பிறந்தது. நல்லவேளையாக, இதற்குமேல் வீட்டில் பாரதக்கதை யுத்தகாண்டம் படித்ததனால் எக்கச்சக்கமாக ஒரு பொல்லாப்பும் சம்பவிக்கவில்லை. ''இவன் பொடியனுக்கல்லவோ மண்டையில் காயம் பட்டுவிட்டது. இதற்கு என்னண்ணே செய்யலாம்?'' என்று அனுமாரிடம்யோசனை கேட்டபோது அனுமார் சட்டென பக்கத்தில் நின்ற காட்டுச் செடிக்குள் தாவி பச்சிலைத் தழை பறித்துவந்து தெருவாசலில் சீதாபிராட்டி துறையிலிருந்துகொண்டு வந்து வைத்திருந்த பொதியை அவிழ்த்து அதில் வெள்ளைத்துணி கிழித்து பச்சிலை மருந்தை என் நெற்றியில்வைத்துக் கட்டிவிட்டார்.

இந்தப் பழைய கொட்டகைக்கூத்தைப்போலத்தான் கந்தையாவும் கதிரவேலுவும் இன்று மறைந்துவிட்டார்கள். அதோ இராவணனும் வந்துவிட்டான் சீதையே நீ என்ன செய்வாய்?

> இந்திரியங்களை நீ உன் வசப்படுத்திக்கொண்டு, உன் நித்திய கருமத்தை உனக்கென்று ஏற்பட்ட சேவாகாரியத்தைநீ செய்துகொண்டிரு.
>
> — கீதாபோதனையில்
>
> காந்தி அடிகள்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

புள்ளி வையுங்கள்'' என்று நல்லூர் எம். பி. யும் தமிழரசுக் கட்சித் தலைவருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பிரதமரைக் கேட்டிருக்கிறார்.

மாவட்டசபைகள் அமைப்பதற்கு ஒப்புக்கொண்டு சிம்மாசனப் பிரசங்கங்களிலும் பல தடவை தங்கள் கொள்கைத் திட்டங்களில் ஒன்றாக வெளியிட்டுவந்த முன்னைய ஆளும் கட்சியினரான இன்றைய எதிர்க்கட்சியினர் தான் 'மாவட்டசபைகள்' நாட்டைப் பிரித்துவிடும் என்றுமுழுமூச்சாக எதிர்த்து வருகின்றனர். பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தத்தில் பிரதேசசபைகள் அமைப்பதற்கு ஒப்புக்கொள்ளப் பட்டிருந்ததைக் கண்டு இதுநாட்டைப்பிளவுபடுத்திவிடும் என்று கூறி 'கண்டி யாத்திரை' சென்று கடுமையாக எதிர்த்த அன்றைய எதிர்க்கட்சியினரான, இன்றையஆட்சியாளர் மாவட்டசபைஅமைக்கஒப்புக்கொண்டனர்.

ஆதரித்தோர் எதிர்ப்பதும் எதிர்த்தோர் ஆதரிப்பதும் இலங்கையின் அரசியலில் சகஜம்தான். அதேபோல் ''தருவோம்; தருகிறோம்; தந்துவிடுவோம்'' என்று வாக்குறுதி அளித்து காலம் கடத்திவிட்டுகையை விரிப்பதும் இங்கு புதிய விஷயமல்ல. மாவட்டசபைகள் அமைப்பதாகக் கூறினோமேயொழிய நாங்கள் கொடுக்கவில்லை என சட்டத்துக்குவிதிகள்கொண்டுவரப்பட்டபொழுது அதை திருமதி பண்டாரநாயகாவும் மற்றும் எதிர்க்கட்சியினரும் எதிர்த்து ஆர்ப்பாட்டமும் கிளர்ச்சியும் செய்தபோதிலும் அவசரகாலநிலைபிரகடனம்செய்யப்பட்டு அதையும் திரு. டட்லி சேனநாயகா நிறைவேற்றினார். இதே அவசரத்துடன் மாவட்டசபைகள் மசோதாவையும் அவர் நினைத்திருந்தால் நிறைவேற்றியிருக்கலாம்.

பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத்தொடர் முடிவடைவதற்குள் மாவட்டசபைகள் மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றிவிடுவோம் என்று தமிழரசுக் கட்சியினர் கூறியிருந்தனர். மாவட்ட சபைகள் அமைப்பதை அரசாங்கம் ஒப்புக் கொண்டிருந்தபோதிலும் ஆளும் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புவளர்ந்துவருகிறது. அமைச்சர்கள் சிலர் இதைக் கடுமையாக எதிர்க்கின்றனராம். இதனால்தான் அமைச்சர் ஒருவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் யு.என்.பிக்கும் ஒற்றுமையைஏற்படுத்தி அதன் பின் 'மாவட்டசபை தரமாட்டோம்,விரும்பினால் இருங்கள் இல்லாவிட்டால் போங்கள்'' என்று தமிழரசுக்கட்சியிடம் கூறிவிடலாம் என்றுமுயற்சி செய்தாராம். அந்த 'ஒற்றுமை' முயற்சி அவர்எதிர்பார்த்தஅளவுக்கு வெற்றியளிக்கவில்லை. எனவே 'மாவட்டசபைகள்' மசோதாமீது இஷ்டப்படி வாக்களிக்கவும் மாவட்டசபை மசோதாவை அரசாங்கம் கொண்டுவராமல், தனிநபர் பிரேரணையாக தமிழரசுக்கட்சியினர் கொண்டுவரலாம் என்றும் அதை அரசாங்கம் ஆதரிக்கலாமென்றும் யோசனைகூறுகின்றனர். எப்படியும் மாவட்டசபைகள் மசோதாவைக் காலம் கடத்தி கடைசியில் கையை விரித்துவிடலாமென்பது ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலரது நம்பிக்கை. சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் நல்லுறவு வலுப்பெற்றதும் மாவட்டசபைகள் மசோதாவைக் கொண்டுவரலாமென்றும் அதை சுலபமாக நிறைவேற்றலாமென்றும் பிரதமர் நினைத்திருக்கக்கூடும். ஆனால் எதிர்க்கட்சியினரின் பிரசாரம் மட்டுமல்லாது தேசீய அரசாங்கத்தின் ''நண்பர்கள்'' என்று சொல்லிக் கொண்ட காட்டிக் கொண்ட தேசீயப்பத்திரிகைகள் என்று தம்மைத் தாமே கூறிக்கொள்ளும் சில

## உலகமேடை . . .

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

காகப் போராடிச்சிறைசெல்வதை தாம் பெரிதாக மதிப்பதாக கிளே சொல்கிறார். கிளேக்கு சிறைத்தண்டனை அளித்தால், பெருந்தொகையான அமெரிக்க நீக்ரோக்கள் சிறை செல்வர் என்று அமெரிக்க நீக்ரோ மக்கள் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் தெரிவித்திருக்கிறார். கிங் கூறுயிருப்பது பொய்க்காதென்பது அமெரிக்க அரசாங்கத்துக்குத் தெரியவேண்டும். வியட்னாமில் அமெரிக்க நடத்தையினால் வியட்னாம் மக்களின் அதிருப்தியையும் தேடிக் கொண்டிருக்கும் ஆபிரிக்க மக்களினதும் அமெரிக்கமக்களினதும் எதிர்ப்பையும் கூட இனிச்சமாளிக்க வேண்டியேற்படும். வியட்னாம் பிரச்னைகூட சிறிதாகக் கூடிய முறையில் காஸியஸ் கிளேயின் உரிமைப்பிரச்னை பெரிதாகலாம்.



## யாருக்கு யார் பாதுகாப்பு?

ஜனநாயகம் என்றால் அது பெரும்பான்மையினரின் ஆட்சி என்பதும் பெரும்பான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பளிப்பதென்பதும் உலகறிந்த உண்மை. ஒரு ஜனநாயக நாட்டில் சிறுபான்மையினர் தமது உரிமைகளுக்காக பெரும் பான்மையினரையே நம்பியிருக்க வேண்டும். பெரும்பான்மையினர் தமது பாதுகாப்புக்காக கூக்குரலிடவேண்டியதில்லை. சிறுபான்மையினரின் உரிமைக் குரலுக்குச் செவிசாய்த்து அவர்களின் அச்சத்தையும், கவலையையும், சந்தேகத்தையும் நீக்கவும் குறைகளைத் தீர்க்கவும் முன்வர வேண்டும். ஆனால் இலங்கையில் மட்டும்தான் சிறுபான்மையினருக்கு உரிமை கொடுக்கக் கூடாதென்றும் பெரும்பான்மையினருக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென்றும் கூக்குரலிடுவதையும் கிளர்ச்சிகள் செய்வதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த வேடிக்கையான காட்சிகளில் ஒன்றுதான் ஆர். ஜி. சேனநாயகாவின் ''நாம் சிங்களவர் இயக்கம்.'' இந்த இயக்கங்களின் விளைவு என்ன?

### அகலவத்தை பிரசாரம்

'மாவட்டசபைகளை' வைத்தே தேர்தல்பிரசாரம் செய்துவரும் எதிர்க்கட்சியினருக்கு தமிழரசுக்கட்சியினரைக்கொண்டே அகலவத்தையில் பதிலளிக்க ஆளும் கட்சியினர் போட்டிருந்ததிட்டம்கைவிடப்பட்டுவிட்டதாம்.

வல்லவனுக்கு வல்லவன்

MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
Clint Eastwood
Marianne Kock
in
Fistfull of Dollars
Technicolor-Techniscope

REGAL - JAFFNA
Time: 4-15, 7-00 9-45 p. m.
Deborah Kerr
Hayley Mills
in
THECHALKGARDEN

வகுப்புகள்
சிங்கள வகுப்புகள் சமீபத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இத்துறையில் தகுதிவாய்ந்த சிங்களாசிரியர்கள் கடமையாற்றுவார்கள். கலை, விஞ்ஞானம், வர்த்தகவகுப்புகள் நடைபெற்றுவருகின்றன. -கணேசன் கல்விநிலையம், அளவெட்டி. 1953

ஆசிரியர்
பௌதிகம், இரசாயனம், தூயகணிதம், பிரயோககணிதம் முதலியபாடங்கள் கற்பிக்க ஆசிரியர்கள்தேவை. H.S.C அல்லதுG.C.E உயர்தர வகுப்புகள் கற்றவர்களாக இருக்கவேண்டும். உடனடியாகவிண்ணப்பிக்கவும். கணேசன்கல்விநிலையம், அளவெட்டி. 1954

29-4- 67 சனிக்கிழமை முதல்
கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
மே மாதம் 6-ம் திகதி முதல்
வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனோகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: ராமண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org